# UNIVERSITY OF MADRAS

# PRE-UNIVERSITY EXAMINATION

## 1957

## PART I—TAMIL

## SELECTIONS IN POETRY

UNIVERSITY OF MADRAS

# PRE-UNIVERSITY COURSE

1957

**PART I—TAMIL**

•

# SELECTIONS IN POETRY

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111054
EGMORE, MADRAS-600 008

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | புறநானூறு | .... | 1 |
| | குறிப்புரை | .... | 45 |
| 2. | திருக்குறள் | .... | 3 |
| | குறிப்புரை | .... | 45 |
| 3. | சிலப்பதிகாரம் | .... | 7 |
| | குறிப்புரை | .... | 48 |
| 4. | கலிங்கத்துப்பரணி | .... | 9 |
| | குறிப்புரை | .... | 48 |
| 5. | பெரிய புராணம் | .... | 14 |
| | குறிப்புரை | .... | 50 |
| 6. | கம்பராமாயணம் | .... | 18 |
| | குறிப்புரை | .... | 51 |
| 7. | நளவெண்பா | .... | 28 |
| | குறிப்புரை | .... | 52 |
| 8. | மீனாட்சியம்மை குறம் | .... | 31 |
| | குறிப்புரை | .... | 53 |
| 9. | மனோன்மணீயம் | .... | 33 |
| | குறிப்புரை | .... | 54 |
| 10. | பாஞ்சாலி சபதம் | .... | 41 |
| | குறிப்புரை | .... | 56 |

# திருத்தம்

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 6 | ளழியினும் | ளவியினும் |
| 11 | கனம் பாடியது | களம் பாடியது |
| 26 | லென்தன் | லென்பின் |
| 27 | தாவிக் கூறத் | தூவிக் கூறத் |
| 28 | குலோத்துங்கள் | குலோத்துங்கன் |
| ,, | சந்திரன் கவர்க்கி | சந்திரன் சுவர்க்கி |
| 30 | றூசலா | றாசலா |
| ,, | வன்மாலைத் | வன்மாலை |
| 54 | அடக்கிய | அடக்கி |
| 55 | குற்றயலிகரம் | குற்றியலிகரம் |

# 1. புறநானூறு

புறநானூறு என்பது, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை எனத் தொகுக்கப்பெற்ற சங்க நூல்களுள், எட்டுத் தொகையைச் சார்ந்த ஒரு நூலாகும். அகம், புறம் என்னும் இருவகைப் பொருள்களுள், புறத்தைப் பற்றிய பாடல்களே இதன்கண் உள்ளன. இன்பத்தைப் பற்றியது அகம் எனவும், அறத்தையும் பொருளையும் பற்றியது புறம் எனவும் கூறப்படும். இந் நூல், புறத்தின் பகுதிகளாகிய வெட்சி முதலிய திணைகளுக்குரிய துறைகளின் பொருளமைந்த 400 பாடல்களைக் கொண்டுள்ள தாகலின், இது புறநானூறு என்னும் பெயர் பெற்றது. இதற்கு வழங்கும் வேறு பெயர்கள் புறம், புறப்பாட்டு என்பன.

இந்நூலிலுள்ள பாடல்களைப் பாடியவர் கடைச்சங்கப் புலவராவர். அவர் யாவரும் ஒரே காலத்தவரல்லர்; ஒரே மர பினரல்லர்; ஓரிடத்தாருமல்லர்; பாடப்பட்டோரும் அத் தன்மையரேயாவர்.

இந்நூலால், பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டிலிருந்த சேர, சோழ, பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தர், சிற்றரசர், அமைச்சர், படைத்தலைவர், வீரர், கடையேழு வள்ளல்கள், கடைச்சங்கப் புலவர்கள் முதலியவர்களுடைய வரலாறுகளும், அக்காலத்து மக்களுடைய பழக்க வழக்கங்களும், பிறவும் அறியலாகும். இந்நூலின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டென்பர்.

இந்நூலில், 188, 312 ஆகிய இரு பாடல்கள் பாடமாக வுள்ளன. அவை முறையே, பாண்டியன் அறிவுடை நம்பி யாலும், பொன் முடியாராலும் பாடப்பட்டவை. பாண்டியன் ஓர் அரசன். புதல்வர்களால் உண்டாகும் இன்பமானது, இம்மையின்பம் எல்லாவற்றிலும் சிறந்ததென்பதை நன்கு விளக்கி யுள்ளான். இவன் காலத்துப் புலவர் பிசிராந்தையார். பொன் முடியார் என்பவர், ஓர் பெண்பாற்புலவர். சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையின் காலத்தவர். இவரியற்றிய பாடலால் ஒவ்வொருவருக்குமுரிய கடப்பாடுகள் இவையென்பது விளங்கும்.

## புறநானூறு

1. படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே

**திணை - பொதுவியல் ; துறை - பொருண்மொழிக்காஞ்சி**
**பாண்டியன் அறிவுடைநம்பி பாடியது.**

2. ஈன்றுபுறந் தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

**திணை - வாகை ; துறை - மூதின்முல்லை.**
**பொன்முடியார் பாடியது.**

# 2. திருக்குறள்

**திருக்குறள்** என்பது, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்ருகும். இது, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பெரும் பிரிவுகளையுடையது. இந்நாலில் 133 அதிகாரங்கள் உண்டு. ஒவ்வோர் அதிகாரமும் பத்துக்குறட் பாக்களைக் கொண்டது. இங்கே பாடமாக வந்துள்ளவை, பொருட்பாலிலுள்ள மூன்று அதிகாரங்களாகும். இந்நூல் முப் பால் எனவும் வழங்கப்பெறும்.

குறட்பாக்களும் அவற்றின் கருத்துக்களும், சங்கநூல் களிலும், பிற்காலத்துத் தோன்றிய நூல்களிலும் எடுத் தாளப்பட்டுள்ளன. இந்நூல் பிறமொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எனவே, இதை உலகப் பொது மறையெனக் கூறுதல் மிகையாகாது. பாக்கள் ஈரடிகளைக் கொண்டவையாயினும், பொருட்செறிவு மிக்கவை என்பதை, 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்னும் பழமொழி விளக்கா நிற்கும். திருக்குறளுக்கு உரையெழுதிய பதின்மருள், பரிமேலழகர் உரையே சிறந்ததாகும்.

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். வள்ளுவர் என்ற பெயர், குலம்பற்றி வந்ததென்றும், தொழில்பற்றி வந்த தென்றும், பலவாருகக் கூறுவர். "திருநாள் படைநாள் கடிநாள் என்றிப் பெருநாட்கல்லது, பிறநாட்கறையாச், செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்" என்ற பெருங்கதையடிகளினின்றும் வள்ளுவரென்பார், தமிழ் நாட்டுப் பழங்குடியுள் ஒரு பகுதியினர் என்பதும், அவர், அரசரது பட்டத்து யானையின் மேல் முரசேற்றித்தாமும் உடனிருந்து முரசறைந்து திருநாள், படை நாள், மணநாள் செய்திகளை மக்களுக்கு அறிவிப்பர் என்பதும் அக் குடியைச் சார்ந்தவர் வள்ளுவர் என்பதும் புலனுகும். ஒரு சாரார், இவர் திருமயிலையில் பிறந்து வளர்ந்தார் என்றும் மற்ருெரு சாரார் மதுரையில் தோன்றி வாழ்ந்தவர் என்றுங் கூறுவர். மயிலையில் அவர் பெயரால் அமைந்த கோயில் ஒன்று உண்டு.

வள்ளுவரது வரலாறு யாதாயினும், இவர் உலகப் புலவருள் ஒருவர் என்பது மறுக்க முடியாத உண்மை. இதனை 'வள்ளுவன்

தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்னும் வாக்கே வலியுறுத்தும். சீத்தலைச் சாத்தனாரும், 'பொய்யில் புலவன்' என்று திருவள்ளுவரைப் பாராட்டியுள்ளார். இவரைக் குறித்து வழங்கப்படும் முதற்பாவலர், செந்நாப் போதார், தேவர் என்னும் சிறப்புப் பெயர்கள், இவரது பெருமையை விளக்குவனவாகும்.

திருக்குறள் சங்கநூல்களுக்கும் முற்பட்டது என்ற கருத்து வலியுடையதாதலின், இந்நூல், சங்ககாலமாகிய கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டது எனக் கொள்ளுதல் பொருத்த முடைத்து.

# திருக்குறள்

## பொருட்பால்

### அரசியல்

### 1. கல்வி

1. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

2. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

3. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

4. உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்

5. உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

6. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

7. யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

8. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

9. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

10. கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

### 2. கேள்வி

1. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

2. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

3. செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னான்றாரோ டொப்பர் நிலத்து.

4. கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

5. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.

6. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

7. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்.

8. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

9. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது.

10. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்.

## 3. அறிவுடைமை

1. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண்.

2. சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

4. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

5. உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு.

6. எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

7. அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்.

8. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

9. எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
யதிர வருவதோர் நோய்.

10. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்,

# 3. சிலப்பதிகாரம்

**சிலப்பதிகாரம்** என்பது, தமிழ் மொழியிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருகும். இது, சேரமுனிவராகிய இளங்கோ வடிகளால் இயற்றப்பட்டது. கண்ணகி வரலாற்றைக் கூறப் புகுந்த இளங்கோவடிகள், புகார், மதுரை, வஞ்சியாகிய தமிழ் வேந்தர் மூவர் தலை நகரங்களிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு, அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்ருவதும், பத்தினிப்பெண்டிரை உயர்ந்தோர் ஏத்துதலும், ஊழ்வினை தானே உருவெடுத்து வந்து செய்தோரை உண்பித்தலுமாகிய மூன்று உயரிய குறிக்கோள்களையும், சிலம்பு காரணமாகப்புலப்படுத்து வதால், இந்நூல், சிலப்பதிகாரம் என்ற பெயர் பெற்றது. இந்நூல் முத்தமிழும் விரவப் பெற்றது. இது, புகார்க் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்ற முப் பெரும் பிரிவுகளையும், 30 காதைகளையும் கொண்டது. இக்காண் டங்களில் உவகைச்சுவையைப் புகார்க்காண்டத்திலும், அவலச் சுவையை மதுரைக்காண்டத்திலும், வீரச்சுவையை வஞ்சிக் காண்டத்திலும் ஆசிரியர் அமைத்துக் காட்டியுள்ளார். பாடப் பகுதியாக வந்துள்ள கந்துகவரி என்பது வஞ்சிக்காண்டத்தி லுள்ள இருபத்தொன்பதாவது காதையாகிய வாழ்த்துக்காதை யின் ஒரு பகுதியாகும். இந்நூலுக்கு அரும்பதவுரை, அடி யார்க்கு நல்லாருரை என்னும் இரண்டு பழைய உரைகளும், காலஞ்சென்ற திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் எழுதிய விரிவான உரையொன்றும் உண்டு.

சிலப்பதிகாரத்தினை இயற்றிய இளங்கோவடிகள், வஞ்சிமா நகரத்தில் அரசு செலுத்திய சேரலாதனது புதல்வர்; செங்குட்டு வனுக்குத் தம்பி; இளமையிலேயே துறவு பூண்டவராதலின், அடிகள் எனப்பட்டார். இவர் ஜைன சமயத்தைச் சார்ந்தவர். சைவரெனக் கூறுவாருமுளர். •இவரது காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டு என்பர்.

**கந்துக்வரி**யென்பது பந்தாடும்போது பாடும்பாட்டு. முற் காலத்தில் பந்து விளையாட்டு பெண்களுக்குரியதாக இருந்தது என்பதற்கும், அவர்கள் பந்தாடும்போது பாட்டுப்பாடுவது உண்டு என்பதற்கும் இது சான்று. பந்தாடிய செய்தி சிந்தா மணியிலும் பெருங்கதை வத்தவ காண்டத்திலும் வந்துள்ளது.

# சிலப்பதிகாரம்

## வஞ்சிக்காண்டம்

## வாழ்த்துக்காதை

### கந்துகவரி

1. பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய்கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன்வாழ்க வாழ்கஎன்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க என்றுபந் தடித்துமே.

2. பின்னு முன்னும் எங்கணும் பெயர்ந்துவந் தெழுந்துலாய்
மின்னுமின் னிளங்கொடி வியனிலத் திழிந்தெனத்
தென்னன் வாழ்க வாழ்கஎன்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க என்றுபந் தடித்துமே

3. துன்னிவந்து கைத்தலத் திருந்ததில்லை நீணிலம்
தன்னினின்று மந்தரத் தெழுந்ததில்லை தானெனத்
தென்னன்வாழ்க வாழ்கஎன்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க என்றுபந் தடித்துமே.

# 4. கலிங்கத்துப்பரணி

பரணி என்பது தமிழிலுள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. "ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பதுபரணி" [இலக்கண விளக்கம்] என்றபடி, இந்நூல் போரில் ஆயிரம் யானைகளை வென்ற ஆண்மை மிகுந்த தலைவனைச் சிறப்பித்துப்பாடுவதாகும். அன்றியும், போர்க்களத்தில் பேய்கள் காளிக்குரிய பரணி நட்சத்திரத்தில், அக்காளியை வழிபட்டு உண்டு மகிழ்தலால், இந்நூல் பரணி எனப்பெயர் பெற்றது எனக்கூறுவாரும் உளர். விஜயதர சோழன் என்ற முதல் குலோத்துங்க சோழனின் (கி. பி. 1070—1122) முதல் மந்திரியும் சேனைத்தலைவனுமாகிய, கருணாகரத்தொண்டைமான் என்பவன், கலிங்க நாட்டிற்சென்று யானைப் போர்வென்ற செய்தியைக்கூறுவதால், இந்நூல் கலிங் கத்துப் பரணி எனப்பெயர் பெறுவதாயிற்று. கலிங்கம் என்பது, இப்போது வடசர்க்கார் என்னும் பிரதேசத்தில், கோதாவரி நதிக்கு அப்பால் வடக்கிலும், மகா நதிக்குத் தெற்கிலும் உள்ள நாடாகும். சேனைத்தலைவன் பெற்ற வெற்றி அரசனையே சாரு மாதலால், இந்நூலுக்குத் தலைவன், முதல் குலோத்துங்கனே யாவான். இந்நூலால், சோழ நாட்டில் விளங்கிய பலசோழர் களின் வரலாறும், சிறப்பும் உணரப்படும். இது, பலவகையான வருணனைகளையும் இனிமையான நடையையும் உடையது.

கலிங்கத்துப் பரணியைப் பாடியவர், விஜயதர சோழனின் அவைக்களப்புலவரான சயங்கொண்டார் என்பவர். இவர், சோழ நாட்டிலுள்ள தீபங்குடி என்ற ஊரில் பிறந்தார். இவரது சமயம் சைவம் என்பர். சிலர் இவரைச் சமணர் எனவும் கூறுவர். "பரணிக்கோர் சயங்கொண்டான்" என்பதனால், இவர் பரணி பாடுவதில் வல்லவர் என்பது பெறப்படுகின்றது. இவரது காலம், முதல் குலோத்துங்க சோழனின் காலமாகிய 11-ம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

இந்நூல், கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது,

இந்திரசாலம், இராச பாரம்பரியம், பேய் முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது, களம்பாடியது எனப்பதின்மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பாடப் பகுதியாக வந்துள்ள களம் பாடியது என்ற பகுதியில், கலிங்க நாட்டுப் போரைப்பற்றி முதுபேய் கூறியதைக் கேட்ட காளி, பேய்க் கூட்டத்தோடு புறப்பட்டுப் போர்க்களத்திற்குச்சென்று, அக்களத்தின் காட்சியைக்கண்டு வியப்பெய்தி, அதனைப் பேய்க் கணங்களுக்குக் காட்டியது கூறப்பட்டுள்ளது.

# கலிங்கத்துப்பரணி

## களம் பாடியது

1. தேவாசுர ராமாயண மாபாரத முளவென்
றோவாவுரை யோயும்படி யுளதப் பொருகளமே

2. காலக்கள மதுகண்டரு ளிறைவீகடி தெனவே
ஆலக்கள முடையான்மகி ழமுதக்கள மனுகி

3. என்னேயொரு செருவெங்கள மெனவேயதி சயமுற்
றந்நேரிழை யலகைக்கண மவைகண்டிட மொழியும்

## வேறு

4. உடலின்மேற் பலகாயஞ் சொரிந்து பின்கால்
உடன்பதைப்ப வுதிர்த்தே யொழுகும் யானை
கடலின்மேற் கலந்தொடரப் பின்னே செல்லுங்
கலம்போன்று தோன்றுவன காண்மின் காண்மின்

5. நெடுங்குதிரை மிசைக்கலணை சரியப் பாய்ந்து
நிணச் சேற்றிற் கால்குளிப்ப நிரையே நின்று
படுங்குருதிக் கடும்புனலை யடைக்கப் பாய்ந்த
பலகுதிரைத் தறிபோன்ற பரிசு காண்மின்

6. விருந்தினரும் வறியவரு நெருங்கி யுண்ண
மேன்மேலு முகமலரு மேலோர் போலப்
பருந்தினமுங் கழுகினமுந் தாமே யுண்ணப்
பதுமமுக மலர்ந்தாரைப் பார்மின் பார்மின்

7. தங்கணவ ருடன்றாமும் போக வென்றே
சாதகரைக் கேட்பாரே தடவிப் பார்ப்பார்
எங்கணவர் கிடந்தவிட மெங்கே யென்றென்
றிடாகினியைக் கேட்பாரைக் காண்மின் காண்மின்

8. வாய்மடித்துக் கிடந்ததலை மகனை நோக்கி
மணியதரத் தேதேனும் வடுவுண்டாயோ
நீமடித்துக் கிடந்ததெனப் புலவி கூர்ந்து
நின்றாவி சோர்வாளைக் காண்மின் காண்மின்

9. பொருதடக்கை வாளெங்கே மணிமார் பெங்கே
போர்முகத்தி லெவர்வரினும் புறங்கொ டாத
பருவயிரத் தோளெங்கே யெங்கே யென்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின்

## வேறு

10. வெயிற்றுரை வேல்சூழ வுந்தைக்க
மண்மேல்வி மூவீரர் வேழம்பர்தங்
கயிற்றூலி மூப்புண்டு சாயாது
நிற்குங்க மாயொத்தல் காண்மின்களோ

11. இருப்புக்க வந்தத்தின் மீதேற
லுஞ்சூர ரெஃகம்பு தைக்கவிறகைப்
பரப்பிச்சு மூன்றிங்கொர் பாருட
ஈதோர்ப ருந்தாடல் காண்மின்களோ

12. வருஞ்சேனை தஞ்சேனை மேல்வந்து
ரூமேவில் வாள்வீரர் வாணுளுகக்
கருஞ்சேவ கஞ்செய்து செஞ்சோற
றச்செய்த கைம்மாறு காண்மின்களோ

## வேறு

13. எதிர்கொளுஞ் சுரர்விமா னங்களிற் சுரர்களாய்
ஏறுமா னவர்கடா மெண்ணுதற் கருமையிற்
கதிர்விசும் பதனிலே யிதனிலும் பெரியதோர்
காளையம் விளையுமா காண்மினோ காண்மினோ

14. அவரிபஞ் சொரிமதங் கழியெனப் புகமடுத்
தவர்பரித் திரையலைத் தமர்செய்கா லிங்கர்தங்
கவரிவெண் ணுரைநிரைத் தவருடற் குருதியிற்
கடல்பரந் தோடுமா காண்மினோ காண்மினோ

15. புவிபுரந் தருள் செயுஞ் சயதரன் ஒருமுறைப்
புணரிமே லணைபடப் பொருவில் விற்குனிதலிற்
கவிகுலங் கடலிடைச் சொரிபெருங் கிரியெனக்
கரிகளின் பிணமிதிற் காண்மினோ காண்மினோ

## வேறு

16. வாயி னீர்ப்புகு வேல்கள் பற்றுவ
லக்கை யோடுநி லத்திடைச்
சாயு மற்றவர் காள மூதிகள்
தம்மை யொத்தமை காண்மினோ

**வேறு**

17. படவூன்று நெடுங்குந்த மார்பி னீன்று
பறித்ததனை நிலத்தூன்றித் தேர்மே னிற்பார்
படவூன்றி விடுந்தொழிலோ ரென்ன முன்னம்
பசுங்குருதி தோன்றுமால் காண்மின் காண்மின்

18. வாயகலம் பரத்தமொடு நிணங்கொண் டோட
மற்றதனை வள்ளுகிரின் பருந்து கோணல்
வாயகலம் பரத்தினிடைக் கௌவி வல்வாய்
வகிர்ப்பட்டு நிலம்பட்ட வண்ணங் காண்மின்

19. சாதுரங்கத் தலைவனைப்போர்க் களத்தில் வந்த
தழை வயிற்றுப் பூதந்தா னருந்தி மிக்க
சாதுரங்கந் தலைசுமந்து கமஞ்சூற் கொண்டு
தனிப்படுங்கா ரெனவருமத் தன்மை காண்மின்

20. முதுகுவடிப் படியிருக்கு மென்ன நிற்கு
முனைக்களிற்றோர் செருக்களத்து முந்து தங்கண்
முதுகுவடுப் படுமென்ற வடுவை யஞ்சி
முன்னம்வடுப் பட்டாரை யின்னங் காண்மின்

# 5. பெரியபுராணம்

பெரிய புராணத்தை இயற்றியவர் சேக்கிழார் என்பவர். இவர், தொண்டைமண்டலத்தின் ஒரு பகுதியாகிய, புலியூர்க் கோட்டத்திலுள்ள குன்றத்தூரில் தோன்றினர். இவர் வேளாண் மரபினர். அருண்மொழித்தேவர் என்பது, இவரது பிள்ளைத்திரு நாமம். சேக்கிழார் என்பது குடிப்பெயராகும். இவர் காலத்து அரசன் அநபாயசோழன் (இரண்டாம் குலோத்துங்கன்) என்பவன். இவன், சேக்கிழாரது புலமையை வியந்து, இவரைத் தன் முதல் மந்திரியாக்கிக் கொண்டான். மேலும், இவருக்கு உத்தமச் சோழப் பல்லவன் என்னும் பட்டத்தையுமளித்தான். இவ்வரசனுடைய வேண்டுகோளுக்கிணங்கி, இவர் தில்லை சபா நாயகரை வணங்க, சிவபிரான் அசரீரியாக 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்க, இவர் அதனையே முதலாகக் கொண்டு புராணம்பாடி முடித்தார். இதனையறிந்தே அரசன் மன மகிழ்ந்து சேக்கிழாருக்கு, 'தொண்டர் சீர் பரவுவார்' என்னும் சிறப்புப் பெயர் கொடுத்தான். சேக்கிழார், இவ்வரசனைத் தான் பாடிய நூலில் பலவிடத்தும் புகழ்ந்துள்ளார். சேக்கிழார் காலம் பன்னிரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதியென்பர்.

பெரிய புராணம் என்னும் இந்நூல், பெருமைபெற்ற சிவனடியார்களின் வரலாற்றினை யுணர்த்துவதாகும். இந்நூலுக்கு ஆசிரியர் இட்டபெயர் திருத்தொண்டர்புராணம் என்பது. இந் நூல் சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாகும்.

ஈண்டு பாடப்பகுதியாக வந்துள்ள மெய்ப்பொருள் நாயனுர்புராணம், பெரிய புராணத்தில், இரண்டாவது சருக்க மான தில்லைவாழந்தணர் சருக்கத்தில், ஐந்தாவது புராணமாக அமைந்துள்ளது.

# பெரியபுராணம்

## மெய்ப்பொருள் நாயனர் புராணம்

1. சேதிநன் ஞட்டு நீடு திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாகர் அன்பின் வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு
காதலால் ஈசர்க் கன்பர் கருத்தறிந் தேவல் செய்வார்

2. அரசியல் நெறியின் வந்த அறநெறி வழாமல் காத்து
வரைநெடுந் தோளால் வென்று மாற்றலர் முனைகள் மாற்றி
உரைதிறம் பாத நீதி ஓங்குநீர் மையினில் மிக்கார்
திரைசெய்நீர்ச் சடையான் **அன்பர் வேடமே** சிந்தை செய்வார்

3. மங்கையைப் பாக மாக உடையவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள்நா யகருக் கன்பர் தாளலால் சார்பொன் றில்லார்

4. **தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்**
**ஆடிய பெருமான் அன்பர்க் காவன ஆகும்**—என்று
நாடிய மனத்தி னேடு நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார்

5. இன்னவா றெழுகு நாளில் இகல்திறம் புரிந்தோர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும் ஆசையால் அமர்மேற் [கொண்டு
பொன்னணி ஓடை யானைப் பொருபரி காலாள் மற்றும்
பன்முறை இழந்து தோற்றுப் பரிபவப் பட்டுப் போனன்

6. இப்படி இழந்த மாற்ரான் இகலினல் வெல்ல மாட்டான்
**மெய்ப்பொருள் வேந்தன்** சீலம் அறிந்து வெண் நீறு சாத்தும்
அப்பெரு வேடங் கொண்டே அற்றத்தில் வெல்வா னகச்
செப்பரு நிலைமை எண்ணித் திருக்கோவ லூரிற் சேர்வான்

7. மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டி
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி ஏந்தி
**மைபொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்பு வைத்துப்**
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்த நாதன்

8. மாதவ வேடங் கொண்ட வன்கணன் மாடந் தோறும்
கோதைசூழ் அளக பாரக் குழைக்கொடி ஆட மீது
சோதிவெண் கொடிகள் ஆடுஞ் சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோயில் திருமணி வாயில் சேர்ந்தான்

9. கடையுடைக் காவலாளர் கைதொழு தேத்தி நின்றே
"உடையவர் தாமே வந்தார் உள்ளெழுந் தருளும்" என்னத்
தடைபல புக்க பின்பு தனித்தடை நின்ற தத்தன்
"இடைதெரிந் தருள வேண்டும் துயில்கொளும் இறைவன்"
[என்றான்

10. என்றவன் கூறக் கேட்டே "யான் அவற் குறுதி கூற
நின்றிடு நீயும்" என்றே அவனையும் நீக்கிப் புக்குப்
பொன்திகழ் பள்ளிக் கட்டில் புரவலன் துயில மாடே
மன்றலங் குழல்மென் சாயல் மாதேவி இருப்பக் கண்டான்

11. கண்டுசென் றணையும் போது கதுமென எழுந்து தேவி
வண்டலர் மாலை யானை எழுப்பிட உணர்ந்து மன்னன்
அண்டர்நா யகனார் தொண்ட ராம்எனக் குவித்த செங்கை
கொண்டிழிந் ததிரேசென்று கொள்கையின் வணங்கிநின்று

12. "மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற தென்கொலோ" என்று கூற
"**உங்கள் நாயகனார்** முன்னம் உரைத்தஆ கமநூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று கொடுவந்தேன் இயம்ப" என்றான்

13. "பேறெனக் கிதன்மேல் உண்டோ பிரான்அருள் செய்தஇந்த
மாறிலா கமத்தை வாசித்தருள் செய வேண்டும்" என்ன
"நாறுபூங் கோதை மாது தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருத்தல் வேண்டும்" என்றவன் விளம்பவேந்தன்

14. திருமகள் என்ன நின்ற தேவியார் தம்மை நோக்கிப்
பரிவுடன் விரைய அந்தப் புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத் தவிசின்மேல் இருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி "இனியருள் செய்யும்" என்றார்

15. கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும்போதில்
பத்திரம் வாங்கித் **தான்முன் நினைந்தஅப் பரிசே செய்ய**
"மெய்த்தவ வேட மேமெய்ப் பொருள்" எனத் தொழுது
[வென்றார்

16. மறைத்தவன் புகுந்த போதே **மனம் அங்கு வைத்த தத்தன்**
இறைப்பொழு தின்கட் கூடி வாளினால் எறிய லுற்றான்
நிறைத்தசெங் குருதி சோர வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப்படும் அளவில் "தத்தா! **நமர்**"எனத் தடுத்துவீழ்ந்தார்

17. வேதனை எய்தி வீழ்ந்த வேந்தரால் விலக்கப் பட்ட
தாதனும் தத்தன் தானும் தலையினால் வணங்கித் தாங்கி
"யாதுநான் செய்கேன்" என்ன "எம்பிரான் அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம் கொண்டுபோய் விடுநீ" என்றார்

18. அத்திறம் அறிந்தார் எல்லாம் "அரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் தன்னைக் கொல்வோம்" எனப்புடை சூழ்ந்த [போது
தத்தனும் அவரை எல்லாம் தடுத்துடன் கொண்டு போவான்
"இத்தவன் போகப் பெற்ற திறைவன தாணை" என்றான்

19. அவ்வழி அவர்கள் எல்லாம் அஞ்சியே அகல நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன் திருநகர் கடந்து போந்து
கைவடி நெடுவாள் ஏந்தி ஆளுறுக் கானஞ் சேர
வெவ்வினைக் கொடியோன் தன்னை விட்டபின் மீண்டு [போந்தான்

20. மற்றவன் கொண்டு போன வஞ்சனை வேடத் தான்மேல்
செற்றவர் தம்மை நீக்கித் தீதிலா நெறியில் விட்ட
சொற்றிறங் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவன் முன்பு சென்றான் கோமகன் குறிப்பின் நின்றான்

21. சென்றடி வணங்கி நின்று "செய்தவ வேடங் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி விட்டனன்" என்று கூற
"இன்றெனக் கையன் செய்த தியார்செய்ய வல்லார்" என்று
நின்றவன் தன்னை நோக்கி நிறைபெருங் கருணை கூர்ந்தார்

22. அரசியல் ஆயத் தார்க்கும் அழிவுறுங் காத லார்க்கும்
விரவிய செய்கை எல்லாம் விளம்புவார் "விதியி னாலே
பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீர்" என்று
புரவலர் மன்று ளாடும் பூங்கழல் சிந்தை செய்தார்

23. தொண்டனார்க் கிமயப் பாவை துணைவனார் அவர்முன் [தம்மைக்
கண்டவா றெதிரே நின்று காட்சிதந் தருளி மிக்க
அண்டவா னவர்கட் கெட்டா அருட்கழல் நீழல் சேரக்
கொண்டவர் இடைய றாமல் கும்பிடுங் கொள்கை ஈந்தார்

24. இன்னுயிர் செகுக்கக் கண்டும் எம்பிரான் அன்பர் என்றே
நன்னெறி காத்த சேதி நாதனார் பெருமை தன்னில்
என்னுரை செய்தே னாக இகல்விறன் மிண்டர் பொற்றாள்
சென்னிவைத் தவர்முன் செய்த திருத்தொண்டு செப்ப [லுற்றேன்

# 6. கம்பராமாயணம்

**கம்பராமாயணம்** என்பது கம்பரது இராமாயணம் அல்லது கம்பரால் இயற்றப்பட்ட இராமாயணம் எனப் பொருள்படும். வடமொழியிலுள்ள வான்மீகி ராமாயணத்தை முதல் நூலாகக் கொண்டு, கம்பர் தமிழில் பாடினர் என்பர். ஆயினும், வான்மீகிராமாயணத்திற்கும் கம்பராமாயணத்திற்கும் பலவேறுபாடுகள் உண்டு. கம்பராமாயணம், சொற்சுவை, பொருட்சுவைகளில் தலை சிறந்து விளங்குகிறது.

ராம, அயநம் என்ற சொற்கள், வடமொழி இலக்கண விதிப்படி, ராமாயணம் என்று ஆயின. இத்தொடர், இராமனை அறிதற்கு இடனுயுள்ளது, இராமனது செலவு எனப்பலபொருள் படும். இனி, இத்தொடரையே, ராமா அயநம் எனப்பிரித்துச் சிறையிருந்த சீதையின் ஏற்றம் கூறுவது என்று பொருள் கூறுவாரும் உளர்.

கம்பருடைய பெயர்க்காரணம், மரபு, காலம் முதலியவற்றில், கருத்து வேற்றுமைகள் பல உள்ளன. இவர், சோழமண்டலத்தில் உள்ள திருவழுந்தூரில், ஆதித்தன் என்பாருக்குப் புதல்வராய்த் தோன்றினர். இவர், திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டார். கம்பர், உவச்சர் குலத்தில் பிறந்தவர் என்றும், அரசர் குலத்தில் தோன்றியவர் என்றும், வேளாளராயிருக்கலாம் என்றும், பலவிதமாகக் கூறுவர்.

கம்பர் என்னும் பெயர், ஏகம்பர் என்பதனுடைய முதற்குறையென்பாரும், கம்பங்கொல்லையைக் காத்தமையால் பெற்ற பெயரென்பாரும், கம்பநாடுடைமை பற்றி வந்த பெயரென்பாரும், காளிகோயில் பூசனைபுரியும் உவச்சர்கட்குரிய குடிப்பெயரென்பாருமாய்ப்பெயர்க்காரணம் கூறுவோர் பலதிறத்தவர். அக்காலத்தில், கம்பர் என்ற பெயர் பலருக்கு வழங்கி வந்தமை, கல்வெட்டுக்களால் அறியப்படுவதால், கம்பர் என்பது இயற்பெயரேயென்று கூறுவாரும் உளர்.

'கல்வியிற்பெரியவன் கம்பன்,' 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியுங் கவிபாடும்,' 'விருத்தமென்னும் ஒண்பாவில் உயர் கம்பன்,'

'கவிச் சக்கரவர்த்தி கம்பன்,' என்ற புகழுரைகள் கம்பருடைய புலமையை நன்கு விளக்கும். ஏரெழுபது, சடகோபரந்தாதி, சரசுவதியந்தாதி முதலியன, கம்பர் இயற்றிய பிறநூல்களாகும் என்பர்.

கம்பர் ஒன்பதாம் நூற்ருண்டில் இருந்தவர் என்றும், பன்னிரண்டாம் நூற்ருண்டைச் சேர்ந்தவர் என்றும் இரு கருத்துக்கள் உள்ளன.

கம்பர் நன்றி மறவாதவர். அவர் தம்மையாதரித்த சடையப்ப வள்ளலைத் தமது நூலில் பத்து இடங்களில் பாராட்டியுள்ளார்.

தாம் இயற்றிய காவியத்திற்குக் கம்பர் இட்டபெயர் இராமாவதாரம் என்பதே. இந்நூலில் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்கள் உள்ளன. பாடப்பகுதியாக உள்ள அங்கதன் தூது படலம் யுத்த காண்டத்தில் பதின் மூன்ருவது படலமாகும்.

**அங்கதன் தூது படலம்**—அங்கதனது தூதைத் தெரிவிக்கும் படலமென்பது பொருள். இராமன், 'சீதையை இப்போதாவது தந்திடுக ; அன்றேல் மறைந்திராமல் போருக்காவது நேரே வருக' என்று இராவணனிடத்துச் சொல்லி வருமாறு அங்கதனைத் தூதாக அனுப்பியமை இப்படலத்திற் கூறப்படும்.

# கம்பராமாயணம்

## அங்கதன் தூது படலம்

1. [இராமபிரான் இராவணனது வருகையை நோக்கி நின்று விபீஷணனைக் கண்டு தான் கருதியதனைக் கூறத் தொடங்குதல்]

வள்ள லும் விரைவி னெய்தி வடதிசை வாயின் முற்றி
வெள்ளமோ ரேழு பத்துக் கணித்த வெஞ்சேனை யோடும்
கள்ளனை வரவு நோக்கி நின்றனன் காண்கி லாதான்
ஒள்ளிய துணர்ந்தே னென்ன வீடணற் குரைப்ப தானான்

2. [இராமபிரான் விபீஷணனிடத்தில் தன்கருத்தைத் தெரிவித்தல்]

தூதுவ னொருவன் தன்னை யிவ்வழி விரைவில் தூண்டி
மாதினை விடுதி யோவென் றுணர்த்தவே மறுக்கு மாகில்
காதுதல் கடனென் றுள்ளங் கருதிய தறனு மஃதே
நீதியு மஃதே யென்றான் கருணையி னிலய மன்னன்

3. [அது கேட்டு விபீஷண சுக்கிரீவரும் இலட்சுமணனும் தத்தங் கருத்தைக் கூறுதல்]

அரக்கர்கோ னதனைக் கேட்டா னழகிற்றே யாகு மென்றான்
குரக்கினத் திறைவன் கேட்டுக் கொற்றவர்க் குற்ற
[தென்றான்
இரக்கம திழுக்க மென்றா னிளையவ னினிநா மம்பு
துரக்குவ தல்லால் வேறோர் சொல்லுண்டோ வென்னச்
[சொன்னான்

4. [இலட்சுமணன், சமாதானங்கூடாது, என்பதற்குக் காரணத்தை விரிவாக எடுத்துக்காட்டல்]

தேசருக் கிடுக்கண் செய்தான் றேவியைச் சிறையில்
[வைத்தான்
பூசுரர்க் கலக்க ணீந்தான் மன்னுயிர் புடைத்துத் தின்றான்
ஆசையி னளவு மெல்லா வுலகமுந் தானே யாள்வான்
வாசவன் திருவுங் கொண்டான்வழியலாவழிமேற் செல்வான்

5. வாழியாய் நின்னை யன்று வரம்பறு துயரின் வைகச்
சூழ்விலா மாயஞ் செய்துன் றேவியைப் பிரிவு செய்தான்
ஏழையா ளிரக்க நோக்கி யொருதனி யிகல்மேற் சென்ற
ஊழிகாண் கிற்கும் வாண ளுந்தையை யுயிர்பண் டுண்டான்

6. அன்னவன் றனக்கு மாதை விடிலுயி ரருளு வாயேல்
என்னுடை நாம நிற்கு மளவெலா மிலங்கை மூதூர்
மன்னவனீயே யென்று வந்தடைந் தவற்கு வாயாற்
சொன்னசொ லென்னு முன்னஞ் சூளுற வென்னுந் தோன்
[ருல்

7. அறந்தரு தவத்தை யாயு மறிவினு லவற்றை முற்றும்
மறந்தனை யெனினு மற்றிவ் விலங்கையின் வளமை நோக்கி
இறந்திது போத நீதென் றிரங்கினை யெனினு மெண்ணிற்
சிறந்தது போரே யென்றுன் சேவகன் முறுவல் செய்தான்

8. [ 'முடிவு நீ கூறுவதேயாயினும் நீதிநூலுக்கு ஏற்பத்தூதனுப்புதல் தக்கது' என்று இராமன் உரைத்தல் ]

அயர்த்திலன் முடிவு மஃதே யாயினு மறிஞ ராய்ந்த
நயத்துறை நூலி னீதி நாந்துறந் தமைத னன்றே
புயத்துறை வலிய ரேனும் பொறையொடும் பொருந்தி—
[வாழ்தல்
சயத்துறை யறனு மஃதே யென்றிவை சமையச்
[சொன்னுன்

9. [இராமபிரான் அங்கதனைத் தூதனுப்புதல் நலமென்று விபீஷணன் முதலியோரிடத்துத் தெரிவித்தல்.]

மாருதி பின்னுஞ் செல்லின் மற்றிவ னன்றி வந்து
சாருநர் வலியோ ரில்லை யென்பது சாரு மன்றே
யாரினி யேகத் தக்கா ரங்கத னமையு மொன்னுர்
வீரமே விளைப்ப ரேனுந் தீதின்றி மீள வல்லான்

10. [யாவரும் ஒப்பவே, இராமன் அங்கதனை நோக்கி, 'தூதுசெல்' என்ன, அவன் பெருமகிழ்ச்சியடைதல்.]

நன்றெென வவன் றனைக்கூய் நம்பிநீ நண்ண லார்பாற்
சென்றுள துணர வொன்று செப்பினை திரிதி யென்றுன்
அன்றவ னருளப் பெற்ற வாண்டகை யலங்கற் பொற்றோள்
குன்றினு முயர்ந்த தென்றால் மனநிலை கூறலாமோ

11. [இராவணனிடம் அங்கதன் சொல்ல வேண்டுவதை இராமன் சுருக்கமாகச் சொல்லுதல்.]

என்னவற் குரைப்ப தென்ன வேந்திழை யாளை விட்டுத்
தன்னுயிர் பெறுகை நன்றே வன்றெனிற் றலைகள் பத்துஞ்

சின்னபின் னங்கள் செய்யச் செருக்களஞ் சேர்தல் நன்றோ
சொன்னவை யிரண்டி னொன்றே துணிகெனச் சொல்லி
[டென்றான்

12. அறத்துறை யன்று வீரர்க் கழகுமன் றாண்மை யன்று
மறத்துறை யன்று சேம மறைந்துறைந் தொதுங்கி வாழ்தல்
நிறத்துற வாளி கோத்து நேர் வந்து நிற்கு மாகிற்
புறத்துற வெதிரே வந்து போர்தரப் புகறி யென்றான்

13. [அங்கதன் வணங்கி மகிழ்ச்சியோடு இராவணனிடம் தூது செல்லுதல்]

பார்மிசை வணங்கிச் சீயம் விண்மிசைப் படர்வதென்ன
வீரன்வெஞ் சிலையிற் கோத்த வம்பென விசையிற் போனான்
மாருதி யல்லனாகி னீயெனு மாற்றம் பெற்றேன்
யாரினி யென்னோ டொப்பா ரென்பதோ ரின்ப முற்றான்

14. [அங்கதன் இராவணனிருப்பிடஞ் சேர்தல்]

அயில்கடந் தெரிய நோக்கு மரக்கரைக் கடக்க வாழித்
துயில்கடந் தயோத்தி வந்தான் சொற்கட வாத தூதன்
வெயில்கடந் திலாத காவன் மேருவின் மேலு நீண்ட
எயில்கடந் திலங்கை யெய்தி யரக்கன திருக்கை புக்கான்

15. [அங்கதன் இராவணனைக் காணுதல்]

அழுகின்ற கண்ண ராகி யனுமன்கொ லென்ன வஞ்சித்
தொழுகின்ற சுற்றஞ் சுற்றச் சொல்லிய துறைக டோறும்
மொழிகின்றவீரர் வார்த்தை முகந்தொறுஞ் செவியின் மூழ்க
எழுகின்ற சேனை நோக்கி யியைந்திருந் தானைக் கண்டான்

16. [இராவணனது ஆற்றலை அங்கதன் வியந்து நிற்றல்]

கல்லுண்டு மரமுண் டேழைக் கடலொன்றுங் கடந்தே
[மென்னுஞ்
சொல்லுண்டே யிவனை வெல்லத் தோற்றத்தோர் கூற்ற
முண்டோ
எல்லுண்ட படைகைக் கொண்டா லெதிருண்டே யிராமன்
[கையில்
வில்லுண்டே லுண்டென் றெண்ணி யாற்றலை வியந்து
[நின்றான்.

17. [அங்கதன், 'இராவணனை வெல்ல இராமன் வந்துள்ளானென்ப தன்றி வேறு ஒருவராலும் இவனை வெல்ல முடியாது' எனல்.]

இன்றிவன் றன்மையெய்த நோக்கினு லெதிர்ந்த போரில்
வென்றவென் ருதை மார்பின் வில்லின்மேற் கணையொன் [றேவிக்
கொன்றவன் ருனே வந்தா னென்று தான் குறிப்பி னல்லால்
ஒன்றிவன் றன்னைச் செய்ய வல்லரோ வுயிர்க்கு நல்லார்.

18. [இராவணனது மகுடமணி பறித்தமை பற்றித்தன் சிறிய தந்தையை அங்கதன் வியத்தல்.]

அணிபறித் தழகு செய்யு மணங்கின்மேல் வைத்த காதற்
பிணிபறித் திவனை யாவர் முடிப்பவர் படிக்கட் பேழ்வாய்ப்
பணிபறித் தெழுந்த மானக் கலுழனி னிவனைப் பற்றி
மணிபறித் தெழுந்த வெந்தை யாரினும் வலிய னென்ருன்.

19. [அங்கதன் இராவணனைக் குறுகி நிற்றல்.]

நெடுந்தகை விடுத்த தூத னினையன நிரம்ப வெண்ணிக்
கடுங்கனல் விடமுங் கூற்றுங் கலந்து கால் கரமுங் காட்டி
விடுஞ்சுடர் மகுட மின்ன விரிகட லிருந்த தென்னக்
கொடுந் தொழில் மடங்க லன்னு னெதிர்சென்று குறுகி [நின்ருன்.

20. [இராவணன் அங்கதனை விசாரித்தல்.]

நின்றவன் றன்னை யன்னு னெருப்பெழ நிமிரப் பார்த்திங்கு
இன்றிவண் வந்த நீயா ரெய்திய கரும மேது
கொன்றிவர் தின்னு முன்னங் கூறுதி தெரிய வென்ருன்
வன்றிறல் வாலி சேயும் வாளெயி றிலங்க நக்கான்.

21. [அங்கதன் தன்னை இராமதூதனென்று தெரிவித்தல்.]

பூதநா யகனீர் சூழ்ந்த புவிக்குநா யகனிப் பூமேற்
சீதைநா யகன்வே றுள்ள தெய்வநா யகனீ செப்பும்
வேதநா யகன்மே னின்ற விதிக்குநா யகன்முன் விட்ட
தூதன்யான் பணித்த மாற்றஞ் சொல்லிய வந்தே [னென்ருன்

22. [இராவணன் இராமபிரானைப்பற்றிப் பரிகசித்துக் கூறல்]

அரன்கொலா மரிகொலா மற்றயன்கொலா மென்பா ரன்றிக்
குரங்கெலாங் கூட்டி வேலைக் குட்டத்தைச் சேது கட்டி
இரங்குவ னாகி லின்ன மறிதியென் றுன்னை யேவும்
நரன்கொலா முலகநாத னென்றுகொண் டரக்க நக்கான்

23. [அங்கதனை நோக்கி, தூதனாகிய உன்னை இன்னானென்று தெரிவி என்று இராவணன் கேட்டல்]

கங்கையும் பிறையுஞ் சூடுங் கண்ணுதல் கரத்து நேமி
சங்கமுந் தரித்த மான்மற் றிங்கர் தன்னைச் சாரார்
அங்கவர் நிலைமை நிற்க மனுசனுக் காக வஞ்சாது
இங்குவந் திதனைச் சொன்ன தூதனீ யாவ னென்றான்

24. [வாலியின் மைந்தனென்று, அங்கதன் இராவணனுக்குத் தன்னைத் தெரிவித்தல்]

இந்திரன் செம்மல் பண்டோ ரிராவண னென்கின் றானைச்
சுந்தரத் தோள்க ளோடும் வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிக டாவித் திரிந்தனன் தேவ ருண்ண
மந்தரப் பொருப்பால் வேலை கலக்கினான் மைந்த னென்றான்

25. [இராவணன், அங்கதனைப் பேதோபாயத்தினால் வேறுபடுத்தப் பார்த்தல்]

உந்தையென் றுணைவ னன்றே யோங்குநற் சான்று [முண்டால்
நிந்தனை யிதன்மே லுண்டோ நீயவன் தூத னாதல்
தந்தன னினக்கு யானே வானரத் தலைமை தாழா
வந்தனை நன்று செய்தா யென்னுடை மைந்த வென்றான்

26. தாதையைக் கொன்றான் பின்னே தலைசுமந் திருகை நாற்றிப்
பேதைய னென்ன வாழ்ந்தா னென்பதோர் பிழையுந் [தீர்ப்பாய்
சீதையைப் பெற்றே னுன்னைச் சிறுவனு மாகப் பெற்றேன்
ஏதெனக் கரிய தென்றா னிறுதியி னெல்லை கண்டான்

27. அந்நர ரின்று நாளை யழிவதற் கைய மில்லை
யுன்னர சுனக்குத் தந்தே னாளுதி யூழிக் காலம்

0-12
N57



பொன்னரி சுமந்த பீடத் திமையவர் போற்றி செய்ய
மன்னவ னாக யானே சூட்டுவென் மகுட மென்றான்

28. [ இராவணன் கூறியதைக் கண்டித்து அங்கதன் கூறுதல் ]

அங்கத னதனைக் கேளா வங்கையோ டங்கை தாக்கித்
துங்கவன் றோளு மார்பு மிலங்கையுந் துளங்க நக்கான்
இங்குநின் றூர்கட் கெல்லா மிறுதியே யென்ப துன்னி
உங்கள்பா னின்று மெம்பாற் போந்தன னும்பி யென்றான்

29. வாய்தரத் தக்க சொல்லி யென்னையுன் வசஞ்செய் வாயேல்
ஆய்தரத் தக்க தன்றோ தூதுவந் தரச தாள்கை
நீதரக் கொள்வேன் யானே யிதற்கினி நிகர்வே றெண்ணில்
நாய்தரக் கொள்ளுஞ் சீய நல்லர சென்று நக்கான்

30. [ இராவணன் முதலில் சினந்து பிறகு 'வந்த காரியம் கூறுக' எனல் ]

அடுவனே யென்னப் பொங்கி யோங்கிய வரக்க னந்தோ
தொடுவனே குரங்கைச் சீறிச் சுடர்ப்படை யென்று தோன்றா
நடுவனே செய்யத் தக்க நாளுலந் தாரை நம்பிப்
படுவதே துணிந்தா யாகில் வந்தது பகர்தி யென்றான்

31. [அங்கதன், இராமபிரான் கூறியதை இராவணனிடம் தெரிவித்தல்]

கூவியின் றென்னை நீபோய்த் தன்குல முழுதுங் கொல்லும்
பாவியை யமருக் கஞ்சி யரண் புக்குப் பதுங்கி னானைத்
தேவியை விடுக வன்றேற் செருக்களத் தெதிர்ந்து தன்னின்
னாவியை விடுக வென்றா னருளினம் விடுகி லாதான்

32. பருந்துணப் பாட்டி யாக்கை படுத்தநாட் படைஞரோடும்
மருந்தினு மினிய மாமன் மடிந்தநாள் வனத்துள் வைகி
இருந்துழி வந்த தங்கை யிருஞ்செவி மூக்கு மெம்பி
அரிந்தநாள் வந்திலாதா னினிச்செய்யு மாண்மை யுண்டோ

33. கிளையொடும் படைஞ ரோடுங் கேடிலா வுயிர்கட் கெல்லாம்
களையெனத் தம்பி மாரை வேரொடுங் களையக் கண்டும்
இளையவன் பிரிய மாய மியற்றியா யிழையை வெளவும்
வளையெயிற் றரக்கன் வெம்போர்க் கினியெதிர் வருவ
[துண்டோ

TAMIL NADU ARCHIVES
No. 111054

34. ஏந்திழை தன்னைக் கண்ணுற் றெதிர்ந்தவர் தம்மையெற்றிச்
சாந்தெனப் புதல்வன் தன்னைத் தரையிடைத் தேய்த்துத்
[தன்னூர்
காந்தெரி மடுத்துத் தானுங் காணவே கடலைத் தாவிப்
போந்தபின் வந்தி லாதா னினிப்பொரும் போரு முண்டோ

35. உடைக்குலத் தொற்றர் தம்பா லுயிர்கொடுத் துள்ளக்
[கள்ளந்
துடைத்துழி வருணன் வந்து தொழுதுழித் தொழாத
[கொற்றக்
குடைத்தொழி லும்பி கொள்ளக் கொடுத்துழி வேலை கோலி
யடைத்துழி வந்தி லாதா னினிவர வைய முண்டோ

36. மறிப்புண்ட தேவர் காண மணிவரைத் தோளின் வைகும்
நெறிப்புண்ட ரீகமன்ன முகத்தியர் முன்னே நென்னல்
பொறிப்புண்ட ரீகம் போலு மொருவனுற் புனைந்த மௌலி
புறிப்புண்டும் வந்தி லாதா னினிப்பொரும் பான்மை
[யுண்டோ

37. [இராமபிரான் சொல்லிய செய்தியைச் சொன்ன அங்கதன் இரண்டிலொன்றைப் புரிக எனல்]

என்றிவை யியம்பி வாவென் றேவின னென்னை யெண்ணி
ஒன்றுனக் குறுவ துன்னீத் துணிந்துரை யுறுதி பார்க்கில்
துன்றிருங் குழலை விட்டுத் தொழுதுவாழ் சுற்றத் தோடும்
பொன்றுதி யாகி லென்தன் வாயிலிற் புறப்ப டென்றான்

38. [நீ ஊரிற் பதுங்கியிருப்பது உனக்குப் பழியையே விளைக்குமென்று அங்கதன் கூறுதல்]
நீரிலே பட்ட சூழ்ந்த நெருப்பிலே பட்ட நீண்ட
பாரிலே பட்ட வானப் பரப்பிலே பட்ட வெல்லாம்
போரிலே பட்டு வீழப் பொருதநீ யொளித்துப் புக்குன்
ஊரிலே பட்டா யென்றாற் பழியென வுளையச் சொன்னான்

39. [இராவணன் சினங்கொண்டு அங்கதனைப் பிடித்து எற்றுமாறு நால்வரை யேவுதல்]
சொற்ற வார்த்தையைக் கேட்டலுந் தொல்லுயிர்
முற்று முண்பது போலு முனிவினன்
பற்றுமின்கடி தின்னெடும் பார்மிசை
யெற்று மின்னென நால்வரை யேவினான்

40. [ அங்கதன், தன்னைப்பற்றினவரான நால்வர் தலையையும் துணித்துக் கோபுரவாயிலில் தாவிக் கூறத் தொடங்குதல் ]

*ஏவி னன்பிடித் தாரை யெடுத்தெழத்*
*தாவி னனவர் தந்தலை போயறக்*
*கூவி னனவன் கோபுர வாயிலில்*
*தூவி னன்றுகைத் தானிவை சொல்லினன்*

41. [ மற்றையோரை நோக்கி அங்கதன் கூறுவன ]

*ஏமஞ் சார வெளியவர் யாவிரும்*
*தூமங் கால்வன வீரன் சுடுசரம்*
*வேமின் போல்வன வீழ்வதன் முன்னமே*
*போமின் போமின் புறத்தென்று போயினன்*

42. [அங்கதன் இராமபிரானையடைந்து அவனது தாளில் வணங்குதல்]

*அந்த ரத்திடை யார்த்தெழுந் தானவன்*
*சிந்து ரத்தந் துதைந்தெழுஞ் செச்சையான்*
*இந்து விண்ணின்றிழிந்துள தாமென*
*வந்து வீர னடியில் வணங்கினன்*

43. [ இராவணன் கருத்து இன்னதென்று அங்கதன் தெரிவித்தல் ]

*உற்ற போதவ னுள்ளக் கருத்தெலாம்*
*கொற்ற வீர னுணர்த்தென்று கூறலும்*
*முற்ற வோதியென் மூர்க்கன் முடித்தலை*
*யற்ற போதன்றி யாசை யறுனென்றான்*

# 7. நளவெண்பா

நளவெண்பாவை இயற்றியவர் புகழேந்திப்புலவர். இவர் வெண்பாப்பாடுவதில் சிறந்தவர் என்பதை, "வெண்பாவிற் புகழேந்தி" என்னும் புகழுரையே வலியுறுத்தா நிற்கும். இவர் தொண்டை மண்டலத்தில், செங்கற்பட்டையடுத்துள்ள, பொன் விளைந்த களத்தூரில் பிறந்தார். இவர், இரண்டாங் குலோத்துங்கள் காலத்திலிருந்த கம்பர், ஒட்டக்கூத்தர் முதலியோருடன் வாழ்ந்தவர் என்பர்.

புகழேந்திப் புலவர், சந்திரன் சுவர்க்கி என்னும் சிற்றரசனது அவைக்களப் புலவராக இருந்தார். அக்காலத்தில் தான் அவர் நளவெண்பாவைப் பாடியிருக்க வேண்டும் என்று கருதப் படுகிறது. இவர் எடுத்தாண்டுள்ள உவமைகளினின்றும் இவரை வைணவர் என்பர்.

இவர், யாவரும் எளிதாகப் படிக்கவும் கேட்கவும் கூடியன வாக அல்லியரசிமாலை, ஏணியேற்றம், கோவலன் கதை முதலிய நூல்களைப் பாடினுரென்று கூறுகின்றனர்.

### சுயம்வர காண்டம்

விதர்ப்ப தேசத்து அரசனது புதல்வி தமயந்தி, நிடத நாட்டு மன்னனாகிய நளனை வரித்தல்.

# நளவெண்பா

## சுயம்வர காண்டம்

1. காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூ மடந்தை
தன் நாட்டம் போலும் தகைமைத்தே, சாகரம் சூழ்
நன்னாட்டில் முன்னாட்டும் நாடு

2. [நளன் அன்னத்தைக் காணல்]
நீணிறத்தால் சோலை நிறம்பெயர, நீடியதன்
தாணிறத்தால் பொய்கைத் தலஞ்சிவப்ப—மாணிறத்தான்
முன் அப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு

3. அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டு போய்
மன்னன் திரு முன்னர் வைத்தலுமே—அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான் கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு

4. "அஞ்சல் மடவனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி அனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண்" என்றான், களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்

5 "திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே! உன்றன்
இசை முகந்த தோளுக் கிசைவாள்—வசையில்
தமையந்தி என்றோதும் தையலாள், மென்றோள்
அமையந்தி என்றோர் அணங்கு."

6. "அன்னமே! நீ உரைத்த அன்னத்தை என்னாவி
உன்னவே சோரும் உனக்கவளோ—டென்ன
அடை" வென்றான், மற்றந்த அன்னத்தை முன்னே
நடைவென்றாள் தன்பால் நயந்து.

7. [அன்னம் தமயந்தியிடம் தூது போதல்]
மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம் போய்க்கன்னி அருகணைய—நன்னுதலும்
தன் ஆடல் விட்டுத் தனியிடஞ் சேர்ந் தாங்கதனை
"என் நாடல் சொல்" என்றாள் ஈங்கு

8. "அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்டோள் வலியும்—திறங்கிடந்த

செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு?''

9. "வாவியுறையும் மடவனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்—காவிரிடைத்
தேர்வேந்தற் கென்நிலைமை சென்றுரைத்தி'' என்று
[ரைத்தாள்,
பார்வேந்தன் பாவை பதைத்து

10. [ வீமராஜன்தமயந்திக்குச் சுயம்வரம் நடத்த எண்ணுதல் ]
"மங்கை சுயம்வரநாள் ஏழென்று வார்முரசம்
எங்கும் அறை'' கென் றியம்பினன்,—பைங்கமுகின்
கூந்தல்மேல் கங்கைக் கொழுந்தோடும் நன்னுடன்
வேந்தர்மேல் தூதோட விட்டு

11. [ அரசரும் தேவரும் தமயந்தியின் சுயம்வரத்துக்கு வருதல் ]
புள்ளுறையும் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமும் இனிதுறைந்தார்—தெள்ளரிக்கண்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்றன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு

12. [ தமயந்தியின் சுயம்வரம் ]
மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினள்,
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து

13. காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாய்ச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணுநின்
றாசலா டுற்றாள் உளம்

14. கண்ணிமைத்தலால் அடிகள் காசினியில் தோய்தலால்,
வண்ண மலர்மாலை வாடுதலால், —எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே யன்னாள்
அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு

15. விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலம் களிகூர—மண்ணரசர்
வன்மாலைத் தம்மனத்தே சூட, வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

# 8. மீனுட்சியம்மை குறம்

இந்நூலாசிரியர் குமரகுருபர அடிகளாவர். இவர், பாண்டி நாட்டில், திருநெல்வேலியையடுத்துள்ள ஸ்ரீ வைகுண்டத்தில் சுமார் முந்நூறு ஆண்டுகட்கு முன்பு தோன்றினர். இவர், சைவ வேளாள மரபைச்சேர்ந்தவர். இவர் ஐந்தாண்டு வரையில் ஊமையாயிருந்து, பின்பு திருச்செந்தூர் முருகப்பிரான் முன்னிலையில் பேசுந்திறம் பெற்ருர் என்பர். இவரிடம் இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் வாய்ந்திருந்தது. இவர் தம்முடைய ஞானசிரியராகிய மாசிலாமணித்தேசிகர் ஆணைப்படி காசிக்குச் சென்று, ஆங்கு ஓர் சைவமடத்தை நிறுவினர். அதன் வாயிலாகத் தமிழையும் சைவமதத்தையும் போற்றி வளர்த்தார். இவர், நீதிநெறி விளக்கம், மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் முதலிய பதினன்கு நூல்களை இயற்றியுள்ளார்.

மீனுட்சியம்மை இங்கு பாட்டுடைத் தலைவியாவர். சொக்கலிங்கப்பெருமான்பால் காதல்கொண்ட ஒருதலைவியின் கையைப் பார்த்துக்குறத்தி குறி சொல்லுவதாக இக்குறம் அமைந்துள்ளது. இத்தகைய பாடல்கள் பொதுமக்கள் மனத்தை மிகவும் கவர்வனவாகும். இங்கே பாடமாக வந்துள்ள செய்யுட்கள் இடையிடையே தெரிந்தெடுக்கப்பெற்றவை.

## மீனாட்சியம்மை குறம்

1. திங்கண்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை தமிழ் முனிவன் வாழுமலை
அங்கயற்க ணம்மைதிரு வருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை யென்மலையே

### வேறு

2. கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக் கிழங்குகல்லி யெடுப்
[போம்
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக் கொடியில் வைத்துத்
[தொடுப்போம்
பழம் பிழிந்த கொழுஞ்சாறுந் தேறலும்வாய் மடுப்போம்
பசுந்தழையு மரவுரியு மிசைந்திடவே யுடுப்போம்
செழுந்தினையு நறுந்தேனும் விருந்தருந்தக் கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண் படுப்போம்
எழுந்துகயற் கணிகாலில் விழுந்துவினை கெடுப்போம்
எங்கள்குறக் குடிக்கடுத்த வியல்பிதுகாணம்மே

### வேறு

3. எண்டிசைக்கும் வேம்பாயெம் மிறையவர்க்குக் கரும்பாகும்
வண்டிசைக்குந் தாரினாள் பேரைச்சொல்லாய் பாடநான்

4. திக்கயங்கள் புறங்கொடுப்பத் திசையெட்டுந் திறை
[கொண்ட
கைக்கயத்தை மேற்கொண்டாள் பேரைச்சொல்லாய் பாட
[நான்

5. எவ்விடத்துந் தாமாகி யிருந்தவருக் கருந்தவரும்
வெவ்விடத்தை யமுதாக்கும் விரைக்கொடியைப் பாடுவனே

6. வைத்தபகி ரண்டமெனு மணற்சிற்றி லிழைத்திழைத்தோர்
பித்தனுடன் விளையாடும் பெய்வளையைப் பாடுவனே

# 9. மனோன்மணீயம்

இது, ஜீவகவழுதியின் புதல்வி மனோன்மணியைக் கதா நாயகியாகக்கொண்டு, புதிய முறையில் எழுதப்பட்ட ஓர் சிறந்த நாடகநூலாகும். இது, இனிய, எளிய செய்யுள் நடையில் அமைந்துள்ளது. இதனை இயற்றியவர், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. இவர் கி. பி. 1855ம் ஆண்டில், ஆலப்புழை என்னும் ஊரிற் பிறந்தார். தந்தையார் பெயர், பெருமாள் பிள்ளை. இவ்வாசிரியர், ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் பெரும்புலமை வாய்ந்தவர். ஆங்கிலத்தில் எம். ஏ பட்டம் பெற்றுத்திருவனந்தபுரம் அரசினர் கல்லூரியில் வரலாற்றாசிரிய ராகவும், தத்துவ ஆசிரியராகவும் பணியாற்றி வந்தார்.

### வரலாற்றுச் சுருக்கம்

மதுரையைத்தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை யாண்டு வந்த ஜீவகவழுதி, தன் முதலமைச்சனாகிய குடிலனது சூழ்ச்சியால் திருநெல்வேலியைத் தலைநகராக மாற்றியமைத்தான். இதனால், அரசனுக்குத் தீங்கு விளையும் என்பதையறிந்த குல குருவாகிய சுந்தரமுனிவர், அவனுக்கு அதைக் குறிப்பாய் அறிவித்தும், அதனையவன் உணரவில்லை. முனிவர், அவ்வரண் மனையிலேயே தமக்கென ஓர் அறையைப்பெற்று அங்கே யிருந்தார்.

மனோன்மணி, ஜீவகவழுதியின் ஒரே புதல்வி. இளமை யிலேயே தாயையிழந்தவள். மணப்பருவமடைந்த மனோன்மணி, புருடோத்தமன் என்னும் சேரமன்னனைக் கனவில் கண்டு காத லித்தாள். அவ்வாறே, புருடோத்தமனும் மனோன்மணியைக் கனவில் கண்டு காதல் கொள்ளலானான். இதனைக் குறிப்பா லுணர்ந்த சுந்தரமுனிவர் இவ்விருவருக்கும் திருமணம் நடத்து மாறு மன்னனுக்கு அறிவுறுத்தினார். குடிலனின் சூழ்ச்சியால் மணம் தடைப்பட்டு, இருவேந்தருக்குமிடையே பகைமூண்டது. போருந் தொடங்கியது. முதல் நாள் போரில் வழுதி தோல்வி யுற்றான். அன்று நள்ளிரவில் தன் மைந்தன் பலதேவனுக்கும், மனோன்மணிக்கும் திருமணம் நடத்திவிடுவதெனக்குடிலன் தீர்மானித்து, அரசனையும் இணங்குமாறு செய்து விட்டான். மனோன்மணியும் சூழ்நிலையைக் கருதி, ஒருவாறு இதற்கு உடன்

பட்டாள். திருமணம் நிறைவேறுதற்குமுன் எதிர்பாரா்தவிதமாகப் பாசறையில் தோன்றிய புருடோத்தமனுல் குடிலனது சூழ்ச்சிகள் யாவும் வெளிப்பட, புருடோத்தமனுக்கும் மனோன்மணிக்கும் திருமணம் நடைபெற்றது. சுந்தரமுனிவர் விருப்பப்படியே யாவும் நிறைவேறியது.

இங்கே பாடமாக வந்துள்ள பகுதி, முதல் அங்கத்தின் முதற்களமாகும். இதில், சுந்தரமுனிவர் நெல்லைப்பதிக்கு வருதல், குடிலன் அவருக்குப் புதிதாக அமைக்கப்பட்ட கோட்டை, கொத்தளங்களைக் காண்பித்தல், மனோன்மணியின் சிறப்பியல்பு முதலியன கூறப்பட்டுள்ளன.

# நாடக உறுப்பினர்

---

| | | |
|---|---|---|
| ஜீவகவழுதி | .... | பாண்டிநாட்டரசன் |
| குடிலன் | .... | ஜீவகனது முதல் மந்திரி |
| சுந்தர முனிவர் | .... | ஜீவகவழுதியின் குலகுரு |
| நிஷ்டாபரர் | ... | சுந்தரமுனிவரின் குலகுரு |
| கருணாகரர் | .... | Do |
| நடராஜன் | .... | வாணியின் காதலன் |
| நாராயணன் | .... | ஜீவகனது துணைவன் |
| பலதேவன் | .... | குடிலன் மகன் |
| சகடன் | .... | வாணியின் தந்தை |
| முருகன் | .... | ஜீவகனது படைவீரருள் ஒருவன் |
| புருடோத்தமவர்மன் | .... | சேரதேசத்தரசன் |
| அருள்வரதன் | .... | சேரதேசத்துச் சேனாதிபதி |
| மனோன்மணி | .... | ஜீவகன் மகள் |
| வாணி | .... | மனோன்மணியின் தோழி |

சேவகர், படைவீரர், ஒற்றர், உழவர், செவிலித்தாய்,
தோழியர், நகரவாசிகள் முதலியோர்.

நாடக நிகழ்ச்சி :
திருநெல்வேலியிலும் திருவனந்தபுரத்திலும்

# மனோன்மணீயம்

## முதல் அங்கம்

### முதற்களம்

இடம்: பாண்டியன் கொலுமண்டபம் காலம்: காலை

(சேவகர்கள் கொலுமண்டபம் அலங்கரித்து நிற்க)

முதற்சேவகன்: புகழ்மிக அமைதரு பொற்சிங் காதனந்
திகழ்தர இவ்விடஞ் சேர்மின். சீரிதே.

2-ம் சேவ: அடியிணை யருச்சனைக் காகுங் கடிமலர்
எவ்விடம் வைத்தனை?

3-ம் சேவ: ஈதோ! நோக்குதி.

4-ம் சேவ: அவ்விடத் திருப்பதென்?

3-ம் சேவ; ஆரம். பொறு! பொறு!
விழவரு வீதியில் மழையொலி யென்னக்
கழைகறி களிறுகள் பிளிறுபே ரொலியும்,
கொய்யுளைப் புரவியின் குரத்தெழும் ஓதையும்,
மொய்திரள் முரசின் முழக்கும் அவித்துச்
‘சுந்தர முனிவா! வந்தனம் வந்தனம்’
எனுமொலி யேசிறந் தெழுந்தது. கேண்மின்!

2-ம் சேவ: முனிவரர் என்றிடிற் கனிவுறுங் கல்லும்!

4-ம் சேவ: எத்தனை பத்தி! எத்தனை கூட்டம்!
எள்விழற் கிடமிலை. யான்போய்க் கண்டேன்!

3-ம் சேவ: உனக்கென் கவலை? நினைக்குமுன் ஓடலாம்.

முதற்சேவகன் அரசனும் ஈதோ அணைந்தனன். காணீர்!
ஒருசா ரொதுங்குமின். ஒருபுறம்! [ஒருபுறம்!

(ஜீவகன் வர)

யாவரும்
(தொழுது) ஜய! ஜய! விஜயீ பவரா ஜேந்திரா!!

(சுந்தர முனிவர், கருணாகரர்; குடிலன், நகர்வாசிகள் முதலியோர் வர)

ஜய! ஜய! விஜய தவரா ஜேந்திரா!!

ஜீவகன் வருக! வருக! குருகிரு பாநிதே!!
திருவடி தீண்டப் பெற்றஇச் சிறுகுடில்
அருமறைச் சிகரமோ ஆலநன் னீழலோ
குருகுல விஜயன் கொடித்தேர்ப் பீடமோ
யாதென ஓதுவன்! தீதற ஆதனத்

திருந்தருள் இறைவ ! என்பவ பாசம்
இரிந்திட நின்பதம் இறைஞ்சுவல் அடியேன்

(ஜீவகன் பாதபூசை செய்ய.)

சுந்தரமுனிவர் : வாழ்க ! வாழ்க ! மன்னவ ! வருதுயர்
சூழ்பிணி யாவுந் தொலைந்து வாழ்க !
சுகமே போலும். மனோன்மணி ?

ஜீவக சுகம். சுகம்

சுந்தர இங்கக ருளாரும் யாவரும் க்ஷேமம் ?

ஜீவக உன்னரு ளுடையோர்க் கென்குறை ? க்ஷேமம்
கூடல் மாநகர் குடிவிட் டிப்பால்
பீடுயர் நெல்லையில் வந்தபின் பேணி
அமைத்தனன் இவ்வரண். இமைப்பறு தேவரும்
கடக்கரும் இதன்திறங் கடைக்கண் சாத்தி
ஆசிநீ யருள நேசித் தேன்நனி
எத்தனை புரிதான் இருக்கினும் எமக்கெலாம்,
அத்த ! நின் அருள்போல் அரணெது ? குடில !
இவ்வழி யெழுந்தநம் இறைவர், கடிபுரி
செவ்விதின் நோக்கக் காட்டுக தெரிந்தே.

குடிலன் ஊன்வரு பெருநோய் தான்விட அடைந்த
அன்பரின் புறஇவ் அருளுருத் தாங்கி
வந்தருள் கிருபா சுந்தரமூர்த்தி !
நீயறி யாததொன் றில்லை ; ஆயினும்,
உன்னடி பரவி யுரைப்பது கேண்மோ :
தென்பாண்டி நாடே சிவலோக மாமென
முன்வா தவூரர் மொழிந்தனர், அன்றியும்
தரணியே பசுவெனச் சாற்றலும் மற்றதில்
பரதமே மடியெனப் பகர்வதுஞ் சரதமேல்,
பால்சொரி சுரைதென் பாண்டி யென்பது
மேல்விளம் பாதே விளங்கும். ஒருகால்
எல்லா மாகிய கண்ணுத லிறைவனும்
பல்லாயிரத்த தேவரும் பிறரும்
நிலைபெற நின்ற பனிவரை துலையின்
ஒருதலை யாக, உருவஞ் சிறிய
குறுமுனி தனியா யுறுமலை மற்றோர்
தலையாச் சமமாய் நின்றதேல், மலைகளில்
மலையமோ அலதுபொன் வரையோ பெரிது ?

சந்நு செவிவழித் தந்த கங்கையும்
பின்னொரு வாயசங் கவிழ்த்த பொன்னியும்,
வருந்திய தேவரோ டருந்தவர் வேண்ட,
அமிழ்திலுஞ் சிறந்த தமிழ் மொழி பிறந்த
மலையம்நின் றிழிந்து, விலையுயர் முத்தும்
வேழவெண் மருப்பும் வீசிக் காழகிற்
சந்தன டவியுஞ் சாடி வந்துயர்
குங்குமம் முறித்துச் சங்கினம் அலறும்
தடம்பணை தவழ்ந்து, மடமயில் நடம்பயில்
வளம்பொழில் கடந்து குளம்பல நிரப்பி,
இருகரை வாரமுந் திருமகள் உறையுளாப்
பண்ணும்இப் புண்ணிய தாமிர வர்ணியும்,
எண்ணிடில் ஏயுமென் றிசைக்கவும் படுமோ ?
இந்நதி வலம்வர இருந்தநந் தொன்னகர்
பொன்னகர் தன்னிலும் பொலிவுறல் கண்டனை.
தொடுகட லோஎனத் துணுக்குறும் அடையலர்
கலக்கத் தெல்லையுங் கட்செவிச் சுடிகையும்
புலப்பட அகன்றாழ் புதுவக ழுடுத்த
மஞ்சுகண் துஞ்சுநம் இஞ்சி யுரிஞ்சி
உதயனும் உடல்சிவந் தனனே ! அதன்புறம்
நாட்டிய பதாகையில் தீட்டிய மீனம்,
உவாமதிக் குறுமாசு அவாவொடு நக்கும்.
வெயில்விரி யெயிலினங் காக்க இயற்றிய
எந்திரப் படைகளுந் தந்திரக் கருவியும்
பொறிகளும் வெறிகொளுங் கிறிகளும் எண்ணில—

சுந்தர முனிவர் (எழுந்து) : சம்போ ! சங்கர ! அம்பிகா பதேள !
நன்று மன்னவ ! உன்றன் தொல்குலங்
காக்கநீ யாக்கிய இவையெலாங் கண்டுளேம்
அல்லா துறுதி யுளதோ ? சொல்லுதி !

ஜீவக : என்னை ! என்னை ! எமக்கருள் குரவ !
இன்னும் வேண்டிய தியாதோ ? துன்னலர்
வெருவுவர் கேட்கினும் ; பொருதிவை வென்றுகைக்
கொள்ளுவ ரென்பதும் உள்ளற் பாற்றோ ?
ஆயினும் அரணி லுளபுரை நோக்கி
நீயினி யியம்பிடில் நீக்குவன் நொடியே.

சுந்தர : கால மென்பது கறங்குபோற் சுழன்று
மேலது கீழாக் கீழது மேலா

மாற்றிடுந் தோற்றம் என்பது மறந்தனை.
வினைதெரிந் தாற்றும் வேந்தன் முனமுனம்
ஆயற் பாற்ற தழிவும் அஃதொழி
வாயிலு மாமென வையகம் புகலும்.
உன்னையும் உன்குலத் துதித்தநம் மனோன்மணி
தன்னையுஞ் சங்கரன் காக்க! தயாநிதே!
அன்பும் அறமுமே யாக்கையாக் கொண்ட
நின்புதல் வியையான் காணநே சித்தேன்.
அத்திரு வுறையும் அப்புறம் போதற்கு
ஒத்ததா மோஇக் காலம்? உணர்த்தாய்.

**ஜீவக:** ஆம்! ஆம்! சேவக! அறைதி சென்று
தேமொழிக் கன்னிதன் சேடியர் தமக்கு
நங்குல முனிவர் இங்குள ரெனவே

(அரசனும், முனிவரும், சீடரும் அப்புறம் போக)

குடில (தனதுள்) நங்கா ரியம்ஜயம் எங்கா கினுஞ் [செல!

**(சேவகனை நோக்கி)** சேவக! முனிவர் சிவிகையுஞ் சின்னமும்
யாவும்அவ் வாயிலிற் கொணர்தி.

**சேவ:** சுவாமி.

(குடிலன் முதலியோர் போக)

**முதல் நகர் வாசி:** கடல்மடை விண்டெனக் குடிலன் கழறிய
நயப்புரை! ஆ! ஆ! வியப்பே மிகவும்!
நாட்டைச் சிறப்பித் துரைத்தது கேட்டியோ?

**2-ம் நக:** கேட்டோம்: கேட்டோம். நாட்டிற் கென்குறை?
விடு! விடு! புராணம் விளம்பினன் வீணாய்.

**3-ம் நக:** குடிலன் செய்யும் படிறுகள் முனிவர்
அறியா தவரோ? சிறிதாயினும் அவன்
உரைத்தது கருத்திடைக் கொண்டிலர் உவர்த்தே.

**1-ம் நகர:** ஆம்! ஆம்! அவன்முகம் ஏமா றினதே.
விரசமா யரசனும் வியர்த்தனன் கண்டேன்.

**2-ம் நக:** முனிவரங் கோதிய தென்னை? முற்றும்
துனிபடு நெருக்கிற் கேட்டிலன்.

**3-ம் நக:** யாதோ—
மனோன்மணி யெனப்பெயர் வழங்கினர், அறிவை

**4-ம் நக:** வாழ்த்தினர் போலும், மற்றென்? [கோல்?

**2-ம் நக :** பாழ்த்த இத்
தந்தையிற் பரிவுளர் மனோன்மணி தன்மேல்.

**3-ம் நக :** ஐயம்மற் றதற்கென் ? யார்பரி வுளார்கள் ?
வையகத் தவள்போல் மங்கைய ருளரோ ?
அன்பே யுயிரா அழகே யாக்கையா
மன்பே ருலகுசெய் மாதவ மதனால்
மலைமகள் கருணையுங் கலைமக ளுணர்வும்
கமலையி னெழிலும் அமையவோ ருருவாய்ப்
பாண்டியன் தொல்குல மாகிய பாற்கடல்
கிண்டெழு மதியென ஈண்டவ தரித்த
மனோன்மணி யன்னையை வாழ்த்தார் யாரே ?

**2 ம் நக :** அன்றியு முனிகட் கவள்மேல் வாஞ்சை
இன்றுமற் றன்றே, இமையவர்க் காக
முன்னொரு வேள்வி முயன்றுழி வன்னி
தவசிகள் தனித்தனி யவிசு சொரிந்தும்.
தழையா தவிதல் கண்டுளம் தளர்ந்து
மன்னனுங் குடிலனுந் துன்னிய யாவரும்
வெய்துயிர்த் திருக்க, விளையாட்டாக
மைதிகழ் கண்ணி பேதை மனோன்மணி
நெய்பெய் போழ்தில் நெடுஞ்சுழி சுழித்து
மங்கிய அங்கி வலமாய்ப் பொங்கிப்
புங்கவர் மகிழ்ச்சியைப் பொறித்தது முதலா
முனிவர் யாவரும் மணியென மொழியில்
தங்கள் தலைமிசைக் கொள்வர், தரணியில்
எங்குள தவட்கொப் பியம்புதற் கென்றே.

**4-நக** ஒக்கும் ! ஒக்கும் ! இக்குங் கைக்கும்
என்னும் இன்மொழிக் கன்னிக் கெங்கே
ஒப்புள துரைக்க ! ஓ ! ஓ ! முனிவர்
அவ்வழி யேகுநர் போலும்
இவ்வழி வம்மின் காண்குதும் இனிதே.

(நகர் வாசிகள் போக)

# 10. பாஞ்சாலி சபதம்

இந்நூலாசிரியராகிய சுப்பிரமணிய பாரதியார், 1882-ம் ஆண்டில் எட்டயபுரத்தில் பிறந்தார். இவர் தந்தையார், சின்னசாமி ஐயர் என்பவர். இவர் இளமையிலேயே கவிபாடுந் திறம் பெற்றிருந்தார். எனவே, இவருக்குப் பாரதி என்னும் பட்டம் வழங்கப்பட்டது. இவரது பாடல்கள் இனிமையும், எளிமையும், உணர்ச்சியும் பொருந்தியவை. இவர், தமது எழுத்து வன்மையினால் நாட்டில் விழிப்பையும், மொழியில் மறு மலர்ச்சியையும் உண்டாக்கினார்.

இங்கே பாடமாக வந்துள்ளது துகிலுரிதற்சருக்கத்திலுள்ள 'விதுரன்சொல்வது' என்றும் பகுதியாகும். இதில் விதுரன்கூறும் அறிவுரைகளையேற்றுக் கொள்ளாது, துரியோதனன் பாஞ்சாலியைச் சபைக்கு அழைத்து வருமாறு தேர்ப் பாகனுக்குக் கட்டளையிட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

## துகிலுரிதற் சருக்கம்

### திரௌபதியை இழத்தல்

### விதுரன் சொல்வது

துரியோ தனனிச் சுடுசொற்கள் கூறிடவும்
பெரியோன் விதுரன் பெரிதுஞ் சினங் கொண்டு
“ மூட மகனே ! மொழி யொணா வார்த்தையினைக்
கேடுவர லறியாய், கீழ்மையினாற் சொல்லிவிட்டாய்
புள்ளிச் சிறுமான் புலியைப்போய்ப் பாய்வதுபோல்
பிள்ளைத் தவளை பெரும்பாம்பை மோதுதல்போல்,
ஐவர் சினத்தின் அழலை வளர்க்கின்றாய்.
தெய்வத் தவத்தியைச் சீர்குலையப் பேசுகிறாய் :
நின்னுடைய நன்மைக்கிந் நீதியெலாஞ் சொல்லுகிறேன் :
என்னுடைய சொல் வேறெவர்பொருட்டு மில்லையடா !
பாண்டவர்தாம் நாளைப் பழியிதனைத் தீர்த்திடுவார்,
மாண்டு தரைமேல், மகனே ! கிடப்பாய் நீ,
தன்னழிவு நாடுந் தறுகண்மை யென்னேடா ?
முன்னமொரு வேனன் முடிந்தகதை கேட்டிலையோ ?
நல்லோர் தமதுள்ளம் நையச் செயல்செய்தான்
பொல்லாத வேனன், புழுவைப்போல் மாய்ந்திட்டான்.
நெஞ்சஞ் சுடவுரைத்தல் நேர்மையெனக் கொண்டாயோ ?
மஞ்சனே, யச்சொல் மருமத்தே பாய்வதன்றோ ?
கெட்டார்தம் வாயி னெளிதே கிளைத்து விடும்
பட்டார்தம் நெஞ்சிற் பலநா ளகலாது
வெந்நரகு சேர்த்துவிடும், வித்தை தடுத்துவிடும்
மன்னவனே, நொந்தார் மனஞ்சுடவே சொல்லுஞ் சொல்
சொல்லிவிட்டேன் ; பின்னொருகால் சொல்லேன் கவுரவர்காள் !
புல்லியர்கட் கின்பம் புவித்தலத்தில் வாராது,
பேராசை கொண்டு பிழைச்செயல்கள் செய்கின்றீர் :
வாராத வன்கொடுமை மாவிபத்து வந்துவிடும்.
பாண்டவர்தம் பாதம் பணிந்தவர்பாற் கொண்டதெலாம்
மீண்டவர்க்கே ஈந்து விட்டு, விநயமுடன்
“ ஆண்டவரே ! யாங்கள் அறியாமை யாற்செய்த
நீண்ட பழியிதனை நீர்பொறுப்பீர் ” என்றுரைத்து

மற்றவரைத் தங்கள் வளநகர்க்கே செல்ல விடீர்,
குற்றந் தவிர்க்கு நெறியிதனைக் கொள்ளீரேல்,
மாபா ரதப்போர் வரும் ; நீ ரழிந்திடுவீர்,
பூபாலரே'' என்றப் புண்ணியனுங் கூறினான்

### துரியோதனன் கூற்று

சொல்லிதனைக் கேட்டுத் துரியோதன மூடன்
வல்லிடிபோல் : "சீச்சி ! மடையா, கெடுக நீ
எப்போது மெம்மைச் சபித்த லியல்புனக்கே.
இப்போதுன் சொல்லை யெவருஞ் செவிக்கொளார்.
யாரடா தேர்ப்பாகன் ! நீ போய்க் கணமிரண்டில்
"பாரதர்க்கு வேந்தன் பணித்தா'' னெனக்கூறிப்
பாண்டவர்தந் தேவிதனைப் பார்வேந்தர் மன்றினிலே
ஈண்டழைத்துவா '' என்றியம்பினான். ஆங்கே தேர்ப்
பாகன் விரைந்துபோய்ப் பாஞ்சாலி வாழ்மனையில்

### தேர்ப்பாகன் கூற்று

சோகந் ததும்பித் துடித்த குரலுடனே
" அம்மனே போற்றி ! அறங் காப்பாய், தாள் போற்றி !
வெம்மை யுடைய விதியால் யுதிட்டிரனார்
மாமன் சகுனியொடு மாயச்சூ தாடியதில்,
பூமி யிழந்து பொருளிழந்து தம்பியரைத்
தோற்றுத் தமது சுதந்திரமும் வைத்திழந்தார்
சாற்றிப் பணயமெனத் தாயேஉனை வைத்தார்
சொல்லவுமே நாவு துணியவில்லை ! தோற்றிட்டார்
எல்லாருங் கூடி யிருக்கும் ஸபைதனிலே,
நின்னை யழைத்துவர நேமித்தான் எம்மரசன் "

### பாஞ்சாலி கூற்று

என்ன வுரைத்திடலும்:—"யார் சொன்ன வார்த்தை யடா !
சூதர் ஸபைதனிலே தொல்சீர் மறக்குலத்து
மாதர் வருதல் மரபோடா ? யார்பணியால்
என்னை யழைக்கின்றாய் ?'' என்றாள். அதற்கவனும்

### தேர்ப்பாகன் கூற்று

" மன்னன், சுயோதனன்றன் வார்த்தையினால், ''
என்றிட்டான்.

### பாஞ்சாலி கூற்று

“ நல்லது. ! நீ சென்று நடந்தகதை கேட்டுவா.
வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம்
என்னை முன்னே கூறி யிழந்தாரா ? தம்மையே
முன்ன மிழந்து முடித்தென்னைத் தோற்றாரா ?
சென்று ஸபையில்இச் செய்தி தெரிந்து வா”,
என்றவளுங் கூறி யிவன்போ கியபின்னர்த்
தன்னந் தனியே தவிக்கு மனத்தாளாய்,
வன்னங் குலைந்து மலர்விழிகள் நீர்சொரிய
உள்ளத்தை அச்சம் உலைவுறுத்தப் பேய்கண்ட
பிள்ளையென வீற்றிருந்தாள். பின்னந்தத் தேர்ப்பாகன்

### தேர்ப்பாகன் கூற்று

மன்னன் ஸபைசென்று :—“ வாள் வேந்தே ! ஆங்கந்தப்
பொன்னரசி தாள்பணிந்து “போதருவீர்” என்றிட்டேன்
‘ என்னை முதல்வைத் திழந்தபின்பு தன்னையென்
மன்ன ரிழந்தாரா ? மாறித் தமைத்தோற்ற
பின்னரென்னைத் தோற்றாரா ?” என்றேநும் பேரவையை
மின்னற் கொடியார் வினவிவரத் தாம் பணித்தார்.
வந்துவிட்டேன் ” என்றுரைத்தான். மாண்புயர்ந்த பாண்டவர்தாம்,
நொந்துபோ யொன்றும் நுவலா திருந்துவிட்டார்.
மற்றும் ஸபைதனிலே வந்திருந்த மன்னரெலாம்
முற்று முரையிழந்து மூங்கையர்போல் வீற்றிருந்தார்.

# குறிப்புரை

## 1. புறநானூறு

1. பொதுவியல் என்பது புறத்திணைகள் எல்லாவற்றிற்கும் பொதுவான இலக்கணங்களைத் தொகுத்துக் கூறுவது.

பொருண்மொழிக்காஞ்சி - முனிவரும் அவர் போன்றோரும் தாம் தெளிந்த பொருளைச் சொல்லுதல்.

படைப்பு - படைக்கப்படுஞ் செல்வம். குறுகுறு - இரட்டைக் கிளவி. அடிசில் - சோறு. விதிர்த்தும் - சிதறியும். மயக்குறு - அறிவை இன்பத்தால் மயங்கச் செய்கின்ற.

2. வாகை - வாகைப்பூவைத்தலையிலேசூடிப்பகைவரைக் கொன்று ஆரவாரித்தல்.

மூதின் முல்லை - வீரர்க்கு மாத்திரமேயன்றி, மறக்குடியிற் பிறந்த மகளிர்க்கும் கோபமுண்டாதலை மிகுத்துச் சொல்லுதல்

புறந்தருதல் - காப்பாற்றுதல். தலைக்கடன் - முதற்கடமை. வடித்துக் கொடுத்தல் - திருத்தமாகச் செய்து கொடுத்தல்; கூர்மையாகச்செய்து கொடுத்தல். சமமுருக்கி - போரில் பகைவர்களையழித்து. களிறெறிந்து - யானைப்படைகளையழித்து. காளை - உவமையாகு பெயர்.

---

## 2. திருக்குறள்

### பொருட்பால்

### அரசியல்

#### கல்வி

1. கல்வியாவது, மாந்தர், தமக்கு இம்மையிலும் மறுமையிலும் உறுதி பயக்கும் நூல்களைக் கற்றலாகும்.

கற்பவை - அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதி பயக்கும் நூல்கள்: கசடு - குற்றம் (ஐயம், திரிபு, விபரீதம் ஆகியவை.) நிற்க - கற்றவாறு நடக்க.

கற்றல் வேண்டுமென்பதும், கற்கப்படும் நூல்களும், அவற்றைக் கற்குமாறும், கற்றதனுல் பயனும் இதனுல் கூறப் பட்டன.

2. எண் - கணிதம். வாழுமுயிர்க்கு - சிறப்புடைய உயிர் களுக்கு. என்ப - என்று சொல்லுவர்.

இதனுல், கற்கப்படும் நூல்களுக்குக் கருவியாயினவும் அவற்றினது இன்றியமையாமையும் கூறப்பட்டன.

3. கண்ணுடையர் - தேசமிடையிட்டவற்றையும் காலமிடை யிட்டவற்றையுங் காணும் ஞானக்கண்ணுடையவர். புண் ணுடையர் - நோய் முதலியவற்ருல் துன்பஞ் செய்யும் ஊனக் கண்ணுடையவர்.

கற்ருரது உயர்வும், கல்லாதாரது இழிவும் இதனுல் தொகுத்துக் கூறப்பட்டன.

4. உள்ள -(இவரை மீண்டும் எப்போது சந்திப்போம் என்று) நினைக்குமாறு. அனைத்து - அத்தன்மைத்து.

இதனுல், கற்ருரது உயர்வு வகுத்துக் கூறப்பட்டது.

5. உடையார் - செல்வமுடையார். இல்லார் - செல்வமற்றவர். ஏக்கறுதல் - ஆசையால் தாழ்தல். கடையவர் - இழிந்தவர். இதனுல், கற்ருரது உயர்வும், கல்லாதாரது இழிவுங்கூறப் பட்டன.

6. தொட்டனைத்து - தோண்டிய அளவிற்ருக. கேணி - கேணி யிலுள்ள நீர் ; கேணி - திசைச்சொல்.

7. சாந்துணையும் - இறக்குமளவும்.

8. ஒருமை - ஒரு பிறப்பு. எழுமை - ஏழு பிறப்பு. ஏமாப்பு - உதவுதல்.

9. காமுறுவர் - இன்பமடைவர்.

10. கேடு - அழிவு. விழுச்செல்வம் - சிறந்தசெல்வம். மாடு - செல்வம்.

இவையைந்து பாட்டாலும் கல்வியது சிறப்புக்கூறப் பட்டது.

## 2-கேள்வி

அதாவது கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்டல்.

1. தலை - முதன்மையானது.

2. செவிக்குணவு - கேள்வி.
இவையிரண்டுபாட்டாலும் கேள்வியினது சிறப்புக்கூறப் பட்டது.

3. அவியுணவு-தேவருக்கு வேள்வித்தீயில் கொடுக்கும் உணவு.
ஆன்ருர் - அறிவுநிறைந்தவர் ; தேவர்.
இதனுல், அதையுடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

4. ஒற்கம் - தளர்ச்சி.

5. ஊற்றுக்கோல் - ஊன்றுகோல் ; விகாரம்.

6. அனைத்து - அவ்வளவு.

7. பேதைமை - ஆகுபெயர். ஈண்டியகேள்வி - நிரம்பிய கேள்வி.
இவை நான்கு பாட்டாலும் கேட்டாருக்கு வரும் நன்மை கூறப்பட்டது.

8. தகைய - தன்மைய. தோட்கப்படாத - துளைக்கப்படாத.

9. நுணங்கிய - நுட்பமாகிய. வணங்கியவாய் - பணிந்தமொழி

10. அவியினும் - இறப்பினும்.
இவை மூன்று பாட்டாலும் கேளாததாலுண்டாகுங் குற்றங் கூறப்பட்டது.

### 3—அறிவுடைமை

அதாவது, கல்வி கேள்விகளினுலாய அறிவோடு உண்மை யறிவுடையனுதல்.

1. அற்றம் - இறுதி. செறுவார் - பகைவர்.
இதனுல் அறிவினது சிறப்புக்கூறப்பட்டது.

2. ஓரீஇ - சொல்லிசையளபெடை. விடா - கடைக்குறை.
உய்ப்பது - செலுத்துவது.

3. யார்யார் - அடுக்குப்பன்மை பற்றி வந்தது.

4. எண்பொருள் - எளிய முறையில் சொல்லப்படும் பொருள்.

5. கூம்பல் - குவிதல்.

6. எவ்வது - எவ்வாறு.
இவை ஐந்து பாட்டாலும் அதனது இலக்கணங்கூறப் பட்டது.

7. ஆவது - இனிமேல் வரப்போவது ; தமக்கு உண்டாகும் நன்மை யறிவார்.

8. அஞ்சுதல் - எண்ணித்தவிர்தல்.
இவையிரண்டு பட்டாலும் அதனையுடையாரது இலக்கணங் கூறப்பட்டது.

9. அதிர - நடுங்க. நோய் - துன்பம்.
இதனால் காக்கலாகுங்காலம் உணர்த்தப்பட்டது.

10. என்னுடையரேனும் - எல்லாச்செல்வமும் உடையோரா யினும்.
இதனால் அவரது உடைமையும் ஏனையோரது இன்மையும் கூறப்பட்டன.

---

## 3. சிலப்பதிகாரம்

### வஞ்சிக்காண்டம்

### வாழ்த்துக்காதை

#### கந்துகவரி

1. இலங்கு - விளங்குகின்ற. பூங்கொடி - விளி. பொலம் - பொன். தென்னன் - பாண்டியன். ஆரம் - மாலை. அடுக்கு கள் பன்மையும் உவகையும் பற்றியன. அடித்தும் - தன் மைப்பன்மை எதிர்கால முற்று.
2. எங்கணும் - எல்லாவிடத்தும். உலாய் - உலாவி. விய னிலம் - அகன்ற நிலவுலகம்.
3. துன்னி - நெருங்கி. கைத்தலம் - கையிடம்.

---

## 4. கலிங்கத்துப் பரணி

#### களம் பாடியது

1. ஓவா உரை - ஒழியாத சொல். தேவாசுரம், ராமாயணம், மாபாரதம் - போரையுணர்த்துவதால் இவை ஆகுபெயர்கள்.
2. காலக்களம் - யமனதுகளம். மகிழமுது - வினைத்தொகை. அமுது - அமுதம்போன்ற இறைவி ; உவமையாகு பெயர்.
3. நேரிழை - பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. அலகைக்கணம் - பேய்க்கூட்டம். மொழி யும் - பெண்பாலையுணர்த்தும் 'செய்யும்' என்னும் வாய் பாட்டுமுற்று.
4. கலம் - மரக்கலம்.

இது முதல் தேவி போர்க்களத்தின் சிறப்பைப் பேய்களுக்கு அறிவித்தலாகும்.

5. மிசை - மேலே. கலணை - தவிசு. நிணம் - கொழுப்பு. குளிப்ப - அழுந்த. கடும்புனல் - மிகுந்தநீர். குதிரைத்தறி- குதிரைமரம். பரிசு – தன்மை.

6. வறியார் - ஏழைகள். இனம் - கூட்டம். பதுமம் - தாமரை. தாம், ஏ, அசைச்சொற்கள்.

7. சாதகர் - பேய்களில் ஒருவகை. இடாகினி - ஒருவகைப் பேய் ; இடுபிணந்தின்னும் இடாகினி.

8. தலைமகன் - கணவன் ; மூத்தமைந்தன்.
புலவி கூர்ந்து - வெறுப்புமிகுந்து.

9. பயிரவி - ஒரு பெண்தெய்வம்.

10. வெயில் - ஒளி. தாரை - கூர்மை. வேழம்பர் - கழைக்கூத் தாடுவோர். கழாய் - மூங்கில்.

11. கவந்தம் - தலையற்ற உடல். எஃகம் - வேலாயுதம். பாறு - கழுகு.

12. வாணாள் உக - வாழ்நாள் அழிய. கருஞ்சேவகம் - கொடிய வீரத்தொழில். கைம்மாறு - பதில் உதவி.

13. சுரர் - தேவர். மானவர் - வீரர். காளையம் -வீரர்கூட்டம்.

14. இபம் - யானை. காலிங்கர் - விகாரம். கவரி - சாமரை. நிரைத்து - வரிசைப்படுத்தி.

15. புணரி - கடல். குனிதலின் - வளைதலினால். கவிகுலம் - குரங்குக் கூட்டம். கிரி - மலை,

16. காள மூதிகள் - எக்காளம் என்னுங்கருவியை ஊதுபவர்

17. படவு - படகு. பட - அழுந்த. என்ன - உவமவுருபிடைச் சொல். நெடுங்குந்தம். நீண்டவேலாயுதம். பசுங்குருதி - பச்சிரத்தம். ஆல் - அசை.

18. உகிர் - நகம். கோணல்வாய் - வளைந்த அலகு. வகிர் - பட்டு - பிளவுபட்டு.

19. சாதுரங்கம் - நீட்டல் விகாரம். தழைவயிறு - பருத்த வயிறு. சாதுரங்கம் - இறந்துபட்ட குதிரை. கமம்சூல் கொண்டு - நிறைந்த கருக்கொண்டு. கார் - மேகம்

20. முதுகுவடு - பெரியமலைகள். முதுகு வடுபடும் - முதுகில் காயம் உண்டாகும். வடு - பழி.

## 5. பெரிய புராணம்

### மெய்ப்பொருள் நாயனூர் புராணம்

1. மன்னி - நிலைபெற்று. மாதொரு பாகர் அன்பின்வழி - சைவ நெறி. மலாடர்கோமான் - மலையமான் வழிவந்த மெய்ப் பொருள் நாயனுர். மலாடு - மரூஉ.

2. வழாமல் - தவருமல். வரை - மலை. மாற்றலர் - பகைவர். முனைமாற்றி - சேனைகளையழித்து. உரை திறம்பாத - சொல்தவருத. நீர்மை - தன்மை. திரைசெய்நீர் - அலைவீசும் கங்கை.

3. எங்கணும் - எல்லாவிடத்தும். மல்க - நிறைய.

4. மாடு - பொன். மன்றுள் - சபையில். அணைதல் - அடைதல்.

5. இகல்திறம்புரிந்து - பகைமைகொண்டு. அமர் - போர். ஓடை - முகபடாம் பொருபரி - போர்செய்கின்ற குதிரை ; வினைத்தொகை. பரிபவம் - அவமானம்.

6. சீலம் - ஒழுக்கம். சாத்தும் - அணியும். செப்பரும் - சொல் வதற்கரிய.

7. மெய் - உடல். வேணி - சடை. கரந்த - மறைந்துள்ள. புத்தகக்கவளி-புத்தகப்பை. மை- இருள். கறுப்பு-களங்கம்.

8. வன்கணுன் - கொடியவன். கோதை - மாலை. அளகபாரம்- கூந்தல். குழை - காதணி. கொடியாட - கொடிபோன்ற மகளிர் நடம்புரிய. மறுகு - வீதி.

9. உடையவர் - சிவனடியார். தடைபல - அடுத்தடுத்துள்ள பலவாயில்கள். தனி - ஒப்பற்ற. இடை - சமயம். கொளும்- விகாரம்.

10. புரவலன் - அரசன். மாடே - அருகில். மன்றல் - மணம். குழல் - கூந்தல்.

11. கதுமென - விரைவுக்குறிப்பு. கொள்கையின் - விதிமுறைப் படி.

12. கொடு - இடைக்குறை.

14. பரிவுடன் - விருப்பத்துடன். தவிசு - ஆசனம்.

15. புரிந்து - விரும்பி. பத்திரம் வாங்கி - சிறுவாளையெடுத்து.

16. இறைப்பொழுதில் - நொடிப்பொழுதில்.

17. தாதன் - ஊழியன்.

18. அரசனைத்தீங்கு - அரசனுக்குத்தீங்கு; வேற்றுமை மயக்கம்.

20. செற்றவர் - பகைவர்.

21. செய்ததியாது - குற்றியலிகரம்

22. அழிவுறும் - மனம் வருந்தும்.
23. நீழல் - விகாரம்
24. செகுத்தல் - அழித்தல்

---

## 6. கம்பராமாயணம்
### அங்கதன் தூது படலம்

1. ஒள்ளியது - சிறந்தது
2. காதுதல் - அழித்தல்
3. குரக்கினம் - விகாரம். துரக்குவது - செலுத்துவது.
4. தேசர் - தேவர். பூசுரர் - அந்தணர். வாசவன் - இந்திரன்
5. ஊழி - யுகாந்தகாலம். உந்தை - உன் தந்தை போன்ற வனுகியஜடாயு
6. சூளுறவு - வாக்குறுதி. தோன்றல் - விளி
8. சமைய - பொருந்த
10. திரிதி - திரும்பிவருவாய். நம்பி - விளி. அங்கதன் உடலும் உள்ளமும் பூரித்தான்
12. நிறம் - மார்பு. வாளிகோத்து - அம்பு தொடுத்து. புகறி (புகல்தி) சொல்வாயாக
13. சீயம் - சிங்கம்
14. கடக்க - வெல்ல. ஆழித்துயில் கடந்தயோத்தி வந்தான் - திருப்பாற்கடலில் பள்ளிகொண்டுள்ள திருமால் அதை விட்டு அயோத்தியில் இராமனுக அவதரித்தான். இவ்வாறு கம்பர் பல இடங்களில் மூலவடிவத்தைக் குறிப்பிட் டுள்ளார்
16. எல் - ஒளி
18. பேழ்வாய் - பிளந்தவாய். பணி - பாம்பு. கலுழனின் - கரு டனைப்போல். மணிபறித்தெழுந்தவெந்தை - இராவணனை மகுடபங்கம் செய்தவனுகிய என் சிறியதந்தை (சுக்கிரீவன்)
19. மடங்கல் -சிங்கம்
20. வாளெயிறு - ஒளிபொருந்திய பல்
21. பூதம் - பஞ்சபூதங்கள். தெய்வநாயகன் - தெய்வங் களுக்குத்தலைவன். நீ செப்பு வேதம் - உன்னுல் ஓதப் படுகின்ற வேதம். சொல்லிய - சொல்லும் பொருட்டு. சேது - அணை.
23. கண்ணுதல் - கண்ணை நெற்றியிலுடைய சிவன்.
24. இந்திரன் செம்மல் - இந்திரனது புதல்வன் வாலி. தூங்க - தொங்க.

26. நாற்றி - தொங்கவிட்டு. நால் - பகுதி. இறுதி - முடிவு.
27. அரி - சிங்கம்
28. துங்க - சிறந்த
30. நாளுலந்தாற்கு - வாழ்நாள் கெட்டு மரணம் நெருங்கியவனுக்கு.
31. அருள் இனம் விடுகிலாதான் - இராமன். இனம் - கூட்டம்.
32. பாட்டி - தாடகை. தங்கை - சூர்ப்பநகை.
34. அனுமான் செய்கை குறிக்கப்பட்டது.
35. முதல் வரியில் வஞ்சவேடத்துடன் வானரசேனையுள் நுழைந்த சுகசாரணர்களை மன்னித்துவிட்டது கூறப்பட்டுள்ளது.
36. பொறிப்புண்டரீகம் - புள்ளிகளையுடைய புலி.
37. பொன்றுதி - இறப்பாய்.
41. தூமம் கால்வன - புகையைக்கக்குவன.
42. செச்சை - சட்டை.

---

## 7. நளவெண்பா

### சுயம்வரகாண்டம்

1. காமர் - விரும்பத்தக்க. காவி - நீலோற்பல மலர். முகை நெகிழ - மொட்டுவிரிய. தளை - கட்டு. சாகரம் – கடல். சகரபுத்திரரால் தோண்டப்பட்டது.
2. மாண்நிறத்தான் - அகன்ற மார்பையுடையவன். அப்புள் - தண்ணீரில். முளரித்தலையில் - தாமரையில். வைகும் - தங்கியிருக்கும். புள் - பறவை.
3. ஆயிழையார் - ஆராய்ந்தணிந்த ஆபரணங்களையுடையவர். மலங்கிற்று - வருந்திற்று. வான்கிளை - சிறந்தசுற்றம். கலங்கிற்று - கலக்கமடைந்தது.
4. அஞ்சல் – எதிர்மறை முன்னிலை வினை. அணிநடை - அழகான நடை. வஞ்சி - கொடி. விஞ்சியது - சிறந்தது. தார் - மாலை. மன் - மன்னன்.
5. வெண்கவிகை - வெண்கொற்றக்குடை. இசைமிகுந்த - புகழ்மிகுந்த. வசையில் - குற்றமற்ற. அமை - மூங்கில். அணங்கு - தெய்வப்பெண்.
6. அன்னமே! - விளி. அன்னத்தை - அன்னம்போன்ற தமயந்தியை ; உவமையாகுபெயர். உன்னவே - நினைத்த மாத்திரத்தில். சோரும் - வாடும். அடைவு - உறவு. நயந்து - விரும்பி.

7. வடிவில் திகழ்கின்ற - அழகிற் சிறந்த. நன்னுதல் - பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. தன் ஆடல் - தன்னுடைய விளையாட்டு. என் நாடல் - என்னை விரும்பியது.

8. மறம் - வீரம். மால் - திருமால். அம்கண் - அழகிய இட மகன்ற.

9. வாவி - பொய்கை. மடம் - இளமை. ஆவி - உயிர். உவந் தளித்தல் - மகிழ்ந்து கொடுத்தல். கா - சோலை.

10. வார்முரசம் அறைக - இறுக்கிக் கட்டப்பட்ட முரசை முழக்குங்கள். பைங்கமுகு - பச்சை நிறமான பாக்குமரம். கங்கைக்கொழுந்து - கங்கையின் நீர்த்துளிகள். தூது - தூதர். ஓட விட்டு - விரைந்து செல்லுமாறு ஏவி.

11. உறையும் - வசிக்கும். தெள் அரி - தெளிவான செவ்வரி. பொன் - திருமகள்.

12. இயலணங்கு - கலைமகளையொத்த அறிவு வாய்ந்த சேடி

13. காவலர் - மன்னர். ஈரிருவர் - நால்வர்

14. காசினி - பூமி. தோய்தல் - படுதல். வண்ணம் - அழகு

15. வெள்கி - வெட்கமடைந்து. ஞாலம் - இடவாகு பெயர். வன்மாலை சூட - மிகுந்த மயக்கத்தைக் கொள்ள. பொன் - இலக்குமி.

---

## 8. மீனுட்சியம்மை குறம்

1. திங்கள் - சந்திரன். புயல் - மேகம். தமிழ் முனிவன் - அகத் தியன்.

2. விழுந்த - பூமிக்குள் உண்டான. கல்லி - தோண்டி. தேறல் - தேன். விருந்து - விருந்தினர். பாயல் - படுக்கை. கணி - இடைக்குறை. வினை - பாவம். அடுத்த - ஏற்ற. இயல்பு - தன்மை

3. எண்டிசை - எட்டுத்திசை. இறைவர்க்குக் கரும்பு - சிவ பிரானல் விரும்பப்படுவதால் கரும்பு எனக் கூறப்பட்டாள். வண்டிசைக்குந்தாரினுள் - வண்டுகள் ரீங்காரம் செய்கின்ற மாலையையுடையவள்

4. திறை – கப்பம். கைக்கயம் - துதிக்கையையுடைய யானை வெவ்விடம் - கொடிய நஞ்சு. விரை - வாசனை. கொடி - உவமையாகுபெயர்.

6. பித்தன் - சிவன். பெய்வளை - வினைத்தொகை.

---

## 9. மனோன்மணீயம்

### முதல் அங்கம், முதற்களம்

2. திகழ்தர - விளங்க.
3. கடி - மணம்.
6. ஆரம் - மாலை. விழவறு - திருவிழா நீங்கப்பெறாத.
7. கழைகறி - மூங்கிலைக்கடிக்கின்ற.
8. கொய்யுளை – கொய்யப்பட்ட பிடரிமயிர். குரம் - குளம்பு. ஓதை - ஓசை.
9. மொய் - நெருங்கிய. அவித்து - அடக்கிய.
14. இலை - தொகுத்தல் விகாரம்.
17. ஒருசார் - ஒருபுறம்.
22–23 அருமறை............பீடமோ (கிருட்டினன் தூது)
24. தீதற - குற்ற மின்றி.
25. பவம் - பிறப்பு.
26. இரிந்திட - கெட்டிட. இறைஞ்சுவல் - வணங்குவேன். தன்மை யொருமை எதிர்கால வினைமுற்று.
27–28. வருதுயர், சூழ்பிணி - வினைத்தொகைகள்.
32. கூடல் - நான்மாடக்கூடல் ; மதுரை.
33. பீடுயர் - பெருமை மிகுந்த, நெல்லை - திருநெல்வேலி.
35. கடக்கரும் - தாண்டிவருவதற்கரிய. திறம் - தன்மை.
36. நனி - மிகவும்.
37. புரி - நகர்.
38. அரண் - பாதுகாவல்.
39. கடி - காவல்.
47. வாதவூரர் - மாணிக்கவாசகர்.
48. தரணி - பூமி.
49. சரதம் - உண்மை.
56. குறுமுனி - அகத்தியன்.
58. வரையோ - மலையோ.
59. சந்நு - ஓர் முனிவன்.
60. வாயசம் - காக்கை. பொன்னி - காவிரி.
64. மருப்பு - தந்தம்.
68. பொழில் - சோலை.

69. உறையுள் - இருப்பிடம்.
72. தொன்னகர் - பழைமையான நகரம்.
74. தொடு - தோண்டப்பட்ட. அடையலர் - பகைவர்.
75. கட்செவி - பாம்பு. சுடிகை - உச்சி
77. மஞ்சு - மேகம். இஞ்சி - மதில். உரிஞ்சி - உராய்ந்து
78. உதயன் - சூரியன்.
79. பதாகை - கொடி.
80. உவாமதி - முழுமதி. மாசு - களங்கம்.
83. கிறி - இரகசிய வழி.
88. குரவ - பெரியோய்
89. வேண்டியதியாதோ - குற்றயலிகரம்.
91. உள்ளற்பாற்றோ - நினைக்கத்தக்கதோ.
92. புரை - குற்றம்.
94. கறங்கு - காற்றாடி.
106. அறைதி - சொல்வாயாக.
110. சிவிகை - பல்லக்கு.
117. படிறுகள் - தவறுகள்.
119. உவர்த்து - வெறுத்து.
121. விரசம் - அதிருப்தி
123. துனி - வருத்தம்.
125. போலும் - ஒப்பில்போலி.
127. பரிவு - அன்பு.
129. யாக்கை - உடல்.
131. மலைமகள் - பார்வதி.
132. கமலை - இலக்குமி.
133. கீண்டு - பிளந்து கொண்டு.
138. வன்னி - தீ.
141. துன்னிய - நெருங்கிய.
148. மிசை - மேலே.
150. இக்கு - கரும்பு.

## 10. பாஞ்சாலி சபதம்

### துகிலுரிதற்சருக்கம்

#### விதுரன் சொல்வது

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 111054

1. சுடுசொல் - கடுஞ்சொல்.
2. பெரிதும் - மிகவும்.
6. பிள்ளைத்தவளை - தவளைக்குஞ்சு.
7. அழல் - தீ.
13. தறுகண்மை - அஞ்சாமை.
14. வேனன் - ஓர் கொடிய அரசன். அவன் தெய்வநிந்தனை செய்ததுடன், யாகம், தானம் முதலிய நல்ல காரியங்களைச் செய்யவொட்டாது தடுத்தான். முனிவர்கள் கூறிய அறவுரைகட்குச் செவி சாய்த்தானில்லை. அதனால் அவர்கள் அவனைத் தருப்பைப் புல்லால் அடித்துக் கொன்றனர்,
15. நைய - வருந்த.
18. மஞ்சன் - மைந்தன் ; போலி.
24. புல்லியர் - அற்பர்.
26. மாவிபத்து - பேராபத்து.
28. விநயம் - பணிவு.
30. நீண்ட பழி - பெரும்பழிக்கு ஏதுவான செயல்.
32. நெறி - வழி.
38. செவிக்கொளார் - காதில் வாங்கமாட்டார்
40. பணித்தான் - கட்டளையிட்டான்.
41. மன்று - சபை.
42. ஈண்டு - இங்கு.
44. சோகம் - துக்கம்,
46. யுதிட்டிரன் - தருமன்.
50. சாற்றி - சொல்லி. உனை - உன்னை ; இடைக்குறை.
55. சீர் - சிறப்பு. மறக்குலம் - வீரக்குடி.
56. மரபு - வழக்கம். பணி - கட்டளை.
58. சுயோதனன் - துரியோதனன்.
70. போதருவீர் - வருவீராக.
73. பேரவை - பெரிய சபை.
74. வினவி - கேட்டு.
76. நுவலாது - சொல்லாமல்.
78. உரையிழந்து - ஒரு வார்த்தையும் பேசாது. மூங்கையர் - ஊமைகள்.

PRINTED AT KESARI PRINTING WORKS, MADRAS-1

# I. புறநானூறு

நல்லிசைப் புலவர்கள் பல்லோரால் அவ்வப்போது பாடிய பாடல்களுள் புறப்பொருள் பற்றித் தொகுக்கப்பட்ட நானூறு செய்யுட்களைக் கொண்ட பனுவல் புறநானூறு எனப்பட்டது. இது சங்கநூல்களான எட்டுத் தொகையினுள் ஒன்று. தமிழர், அறம் பொருள் இன்பம் வீடு எனப் பிறர் கூறுவனவற்றை அகம் புறம் என்ற இரு பிரிவினுள் அடக்குவர். புறம் என்னும் பிரிவில் அறமும் பொருளும் வீடும் உரைக்கப்படும். எனவே, இந்நூல் துணையாகப் பழந்தமிழருடைய வாழ்க்கை நிலையும், அளி கொடை செங்கோல் என்பனவும், வீரம் வென்றி முதலியனவும் அறியப்படுவன. பாடமாக வந்துள்ள பகுதிகள் கோப்பெருஞ் சோழனுடைய வாழ்க்கையோடு தொடர்புடைய செய்திகளைத் தழுவி நிற்பன.

## புறநானூறு

1. நுங்கோ யாரென வினவின் எங்கோக்
களமர்க் கரித்த விளையல் வெங்கள்
யாமைப் புழுக்கிற் காமம்வீட ஆரா
ஆரற் கொழுஞ்சூ டங்கவுள் அடாஅ
வைகுதொழின் மடியும் மடியா விழவின்
யாணர் நன்னாட் டுள்ளும் பாணர்
பைதற் சுற்றத்துப் பசிப்பகை யாகிக்
கோழி யோனே கோப்பெருஞ் சோழன்
பொத்தில் நண்பிற் பொத்தியொடு கெழீஇ
வாயார் பெருநகை வைகலும் நக்கே.

**திணை—பாடாண்டிணை : துறை—இயன்மொழி**

**கோப்பெருஞ் சோழனைப் பிசிராந்தையார் பாடியது.**

2. மண்டமர் அட்ட மதனுடை நோன்றாள்
வெண்குடை விளக்கும் விறல்கெழு வேந்தே!
பொங்குநீர் உடுத்தவிம் மலர்தலை யுலகத்து
நின்றலை வந்த இருவரை நினைப்பின்
தொன்றுறை துப்பினின் பகைஞரும் அல்லர்
அமர்வெங் காட்சியொடு மாறெதிர் பெழுந்தவர் ;
நினையுங் காலை நீயும் மற்றவர்க்
கனையை யல்லை அடுமான் தோன்றல்,
பரந்துபடு நல்லிசை யெய்தி மற்றுநீ

உயர்ந்தோர் உலகம் எய்திப் பின்னும்
ஒழித்த தாயம் அவர்க்குரித் தன்றே;
அதனால், அன்ன தாதலும் அறிவோய் நன்றும்
இன்னுங் கேண்மதி யிசைவெய் யோயே!
நின்ற துப்பொடு நிற்குறித் தெழுந்த
எண்ணில் காட்சி இளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க்கெஞ் சுவையே;
அமர்வெஞ் செல்வ நீயவர்க் குலையின்
இகழுநர் உவப்பப் பழியெஞ் சுவையே?
அதனால், ஒழிகதில் அத்தைநின் மறனே, வல்விரைந்
தெழுமதி வாழ்கநின் னுள்ளம்; அழிந்தோர்க்
கேமம் ஆகுநின் ருணிமுன் மயங்காது
செய்தல் வேண்டுமால் நன்றே வானோர்
அரும்பெறல் உலகத் தான்றவர்
விதுப்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே.

## திணை—வஞ்சி: துறை—துணைவஞ்சி

கோப்பெருஞ் சோழன் மக்கள்மேற் சென்றுவனைப்
புல்லாற்றூர் எயிற்றியனார் பாடியது.

3. செய்குவங் கொல்லோ நல்வினை யெனவே
ஐயம் அறுஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே;
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே;
அதனால், உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கின் எய்த லுண்டெனின்
தொய்யா உலகத்து நுகர்ச்சியுங் கூடும்;
தொய்யா உலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் பிறப்பின் இன்மையுங் கூடும்;
மாறிப் பிறவார் ஆயினும் இமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல்தவத் தலையே.

## திணை—பொதுவியல்: துறை—பொருண்மொழிக் காஞ்சி

கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்தான் சொற்றது.

4. கவைக்கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்
தாதெரு மறுகிற் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்டயிர்க் கொளீஇ
ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை

அவ்வரை கொய்யுநர் ஆர மாந்தும்
தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்
பிசிரோன் என்பவென் னுயிரோம் புநனே ;
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே.

## திணை—பாடாண்டிணை : துறை—இயன்மொழி

**கோப்பெருஞ் சோழன், பிசிராந்தையார் வாராரென்ற சான்றோர்க்கு அவர் வருவாரென்று சொல்லியது.**

5. கேட்டன் மாத்திரை யல்ல தியாவதும்
காண்டல் இல்லா தியாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமைய ராயினும்
அரிதே தோன்றல் அதற்பட ஒழுகலென்
றையங் கொள்ளன்மின் ஆரறி வாளிர்
இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே
தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
பேதைச் சோழன் என்னுஞ் சிறந்த
காதற் கிழமையும் உடையன் அதன்தலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவன் ஒழிக்கவவற் கிடமே.

## திணை—பாடாண்டிணை : துறை—இயன்மொழி

**கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்தான், பிசிராந்தையார்க்கு இடனொழிக்க என்றது.**

6. நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே
எனைப்பெருஞ் சிறப்பினோ டீங்கிது துணிதல்
அதனினு மருட்கை யுடைத்தே பிறனாட்டுத்
தோற்றஞ் சான்ற சான்றோன் போற்றி
இசைமர பாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை யீங்கு வருதல்
வருவன் என்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே
அதனால், தன்கோல் இயங்காத் தேயத் துறையும்
சான்றோன் நெஞ்சுறப் பெற்ற தொன்றிசை
அன்னோனை யிழந்தவிவ் வுலகம்
என்னா வதுகொல் அளியது தானே.

## திணை—பொதுவியல் : துறை—கையறுநிலை

கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்தானுழைச் சென்ற பிசிராந்தையாரைக் கண்டு பொத்தியார் பாடியது.

7. பொன்னுந் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய ஆயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலரா குபவே.

## திணை—பொதுவியல் : துறை—கையறுநிலை

பிசிராந்தையார் வடக்கிருந்தாரைக் கண்ட கண்ணகனார் பாடியது.

8. உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழல்
முழூஉ வள்ளூரம் உணக்கும் மள்ள !
புலவுதி மாதோ நீயே
பலரால் அத்தை நின் குறியிருந் தோரே.

## திணை—பொதுவியல் : துறை—கையறுநிலை

கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்தானைக் கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் பாடியது.

9. பெருஞ்சோறு பயந்து பல்யாண்டு புரந்த
பெருங்களி றிழந்த பைதற் பாகன்
அதுசேர்ந் தல்கிய அழுங்கல் ஆலை
வெளில்பா ழாகக் கண்டுகலுழ்ந் தாங்குக்
கலங்கினென் அல்லனோ யானே பொலந்தார்த்
தேர்வண் கிள்ளி போகிய
பேரிசை மூதூர் மன்றங் கண்டே.

## திணை—பொதுவியல் : துறை—கையறுநிலை

கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்தானுழைச் சென்று மீண்டுவந்து உறையூர்கண்ட பொத்தியார் அழுது பாடியது.

10. பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே
ஆடுநர்க் கீத்த பேரன் பினனே
அறவோர் புகழ்ந்த ஆய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண்ணன் பினனே
மகளிர் சாயன் மைந்தர்க்கு மைந்து
துகளறு கேள்வி யுயர்ந்தோர் புக்கில்

அனையன் என்னு தத்தக் கோனை
நினையாக் கூற்றம் இன்னுயிர் உய்த்தன்று
பைதல் ஒக்கற் றழீஇ யதனை
வைகம் வம்போ வாய்மொழிப் புலவீர் !
நனந்தலை யுலகம் அரந்தை தூங்கக்
கெடுவில் நல்லிசை சூடி
நடுகல் ஆயினன் புரவலன் எனவே.

### திணை—பொதுவியல் : துறை—கையறுநிலை

கோப்பெருஞ் சோழன் நடுகற்கண்டு பொத்தியார் பாடியது.

11. அழலவிர் வயங்கிழைப் பொலிந்த மேனி
நிழலினும் போகாநின் வெய்யோள் பயந்த
புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாவென
என்னிவ ணொழித்த அன்பி லாள !
எண்ணா திருக்குவை யல்லை
என்னிடம் யாதுமற் றிசைவெய் யோயே !

### திணை—பொதுவியல் : துறை—கையறுநிலை

கோப்பெருஞ் சோழனைத் தன் மகன் பிறந்தபின் பெயர்த்துச் சென்று
பொத்தியார் எனக்கு இடந்தாவென்று சொற்றது.

12. பலர்க்குநிழ லாகி யுலகமீக் கூறித்
தலைப்போ கன்மையிற் சிறுவழி மடங்கி
நிலைபெறு நடுகல் ஆகியக் கண்ணும்
இடங்கொடுத் தளிப்ப மன்ற வுட்கம்போ
டின்னுயிர் விரும்புங் கிழமைத்
தொன்னட் புடையார் தம்முழைச் செலினே.

### திணை—பொதுவியல் : துறை—கையறுநிலை

கல்லாகியும் இடங்கொடுத்த கோப்பெருஞ்சோழனை வடக்கிருந்த
பொத்தியார் பாடியது.

## II. முல்லைப் பாட்டு

இது, கடைச் சங்கப் புலவர்களாகிய நக்கீரனர் முதலிய நல்லிசைப் புலவர்களால் இயற்றப் பெற்ற பத்துப் பாட்டினுள் ஐந்தாவது; 103 அடிகளையுடைய அகவற்பாவால் ஆகியது; தலைவியின் கற்பு மேம் பாட்டை விளக்கி, முல்லைத் திணைக்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பவற்றை ஆங்காங்கே இயற்கை வனப்புகள் கெழுமப் புலப்படுத்தும் பாட்டாதலின், இஃது இப்பெயர் பெற்றது. இதனை இயற்றியவர், காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார்

நப்பூதனார் என்பவர். பகைமேற் சென்ற தலைவன் வருமளவும் அவன் வற்புறுத்திக் கூறிய வண்ணம் தலைவி ஆற்றியிருந்தபொழுது, அவன் வந்ததனைக் கண்ட தோழி முதலியோர், தம்முட் கூறியதாக இந்நூல் இயற்றப் பெற்றது. தனித்திருக்கும் தலைவியின் கற்புமேம்பாடும், கார்காலத்தின் இயற்கையும், படைவிட்டில் தங்கியிருக்கும் புண்பட்ட வீரர்கள் துன்ப நிலையும், படைவிட்டின் அமைப்பும், தலைவனது இயல்பும், பண்டைக்கால வழக்கங்கள் சிலவும், யவனர் முதலிய பிறநாட்டார் தமிழரசரிடம் கொண்டிருந்த தொடர்பும் பிறவும் இப்பாட்டினால் அறியலாகும். பத்துப் பாட்டினுள் இப்பாட்டே அடியளவிற் சிறியது.

---

## முல்லைப் பாட்டு

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு

கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை

அரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுய ரலமர னோக்கி யாய்மகள்
நடுங்குசுவ லசைத்த கையள் கைய

கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
வின்னே வருகுவர் தாய ரென்போள்
நன்னர் நன்மொழி கேட்டன மதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து

வருதல் தலைவர் வாய்வது நீநின்
பருவர லெவ்வங் களைமா யோயெனக்
காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்பக்
கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்

A
69